விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 24 வியாழக்கிழமை (08.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 201

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

RAMCO

## ஐ.நா.சபை அதிகாரிகளுடன் இலங்கை உயர் மட்டப் பேச்சு

### பாதுகாப்புக் குறித்து உத்தரவாதம் அளிப்பு

(கொழும்பு)

கொழும்பு ஐ.நா.அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதையடுத்து இலங்கை அரசாங்கம் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. அதிகாரிகளுடன் உயர்மட்டக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.இக் கலந்துரையாடல்களின் போது, கொழும்பிலுள்ள ஐ.நா.உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் அளித்ததாக ஐ.நா.இணைப்பேச்சாளர் சோய் சோங் –அஹ் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித ஹோகன்ன ஆகியோரே இந்த உத்தரவாதத்தை அளித்துள்ளதாக சோய் சோங் – அஹ் கூறியுள்ளார்.

ஐ.நா. தற் (20ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய சுதந்திர முன்னணியின் முட்டாள்தனமான செயற்பாடு

### குற்றஞ்சாட்டுகின்றார் மேதானந்த தேரர்

(கொழும்பு)

ஐ.நாவின் செயற்பாடுகளுக்கும் அதன் ஊழியர்களுக்கும் தற்போதைய நிலையில் இடையூறு ஏற்படுத்துவது முட்டாள்தனமான நடவடிக்கையாகும் என ஜாதிக ஹெலஉறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. எல்லாவல மேதானந்த தேரர் கூறியுள்ளார்.

ஐ.நா. பல அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இலங்கை தொடர்பாக ஆராய்வதற்கான நிபுணர்கள் குழுவை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனே நியமித்தார்.

அதனால் அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர் அவரே தவிர ஐ.நா. அமைப்பல்ல என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் நாம் எதிர்காலம் குறித்துப் புத்திசாலித்தனமாகச் சிந்திக்க வேண்டும். எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும்போது (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் அரசியல் தீர்வு விடயத்தில் இந்திய அரசு ஒத்துழைக்க வேண்டும்

## கூட்டமைப்பு நேரில் சென்று கோரிக்கை

(புதுடில்லி)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்திய அரசாங்கம் இலங்கை தமிழ் மக்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது. இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை நேற்று புதுடில்லியில் சந்தித்து உரையாடும் போதே அவர்கள் இதனைக் கோரியுள்ளனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நிபுணர்கள் குழுவுக்கு அமெரிக்கா பூரண ஆதரவு!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மார்க் டொன்னர் தெரிவித்துள்ளார்.

மக்களின் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆதரவளிக்கும் அதேவேளை, குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர்கள் குழு நியமனத்திற்கு எதிராக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர் பாரிய போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

போராட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டபோது அமெரிக்கா இந்த கருத்துக்களை வெளியிட்டது. (ச–5)

## வாகன உதிரிப்பாகங்கள் வன்னியில் கொள்ளை

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்வின் போது பொதுமக்கள் கைவிட்டுவிட்டு வந்த வாகனங்களை உதிரிப்பாகங்களாகக் கொள்ளையடித்து வந்ததாகச் சந்தேகிக்கப்படும் நால்வரை மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்வேறு இடங்களில் பல வாகனங்களை உதிரிப்பாகங்களாக்கிய இவர்கள் அவற்றை இரண்டு வீடுகளில் மறைத்து வைத்திருப்பதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த சந்தேக நபர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்து நாடுகளிலும் இயங்கி வரும் ஐ.நா. அலுவலகம் முற்றுகையிடப்படும்

### விமல் வீரவன்ச ஆவேசம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான நிபுணர் குழுவை ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் கலைக்கத் தவறினால் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஐ.நா. அலுவலகங்களின் முன்பாகவும் போராட்டம் நடத்துவோம்– எமது போராட்டம் உலகளாவிய ரீதியில் முடுக்கி விடப்படும் என்று வீடமைப்பு மற்றும் பொறியியல் தொழில்நுட்ப அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் ஐ.நாவின் கொழும்பு அலுவலகம் மீதான முற்றுகை குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் சொன்ன பதில்களும் வருமாறு,

கேள்வி:– நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?

பதில்:– பான் கீ மூன் அவருடைய அதிகார எல்லைக்கு அப்பால்பட்ட விதத்தில் இலங்கைக்கு எதிரான ஐ.நா. நிபுணர் குழுவை அமைத்து விட்டார்.

இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)



## பாடசாலை மட்ட விளையாட்டு விழா யாழ்ப்பாண மாவட்ட அணி முதலிடம்

### 2 ஆம் இடத்தை மன்னார் வென்றது

(யாழ்ப்பாணம்)

கோலாகலமாக நடைபெற்று முடிந்த வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் ஆயிரத்து 709 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண மாவட்டம் முதலிடம் பெற்றது.

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் முன்னரே முடிவுற்ற நிலையில் தடகளப் போட்டிகள் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் 4 நாள்களாக நடைபெற்று வந்தது.

மேற்படி தடகளப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமானது. கல்வி பண்பாட்டலுவல்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் மாணவி சடலமாக மீட்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் மொறவெவ பகுதியில் 16 வயது சிறுமி ஒருவருடையதென்று சந்தேகிக்கப்படும் சடலம் ஒன்று எரிந்த நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவியான இச் சிறுமி காணாமல் போயிருந்தார் என்று பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பொலிஸாரால் இச் சிறுமி காணாமல் போயிருந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கைது செய்து தடுத்து வைத்திருந்தனர்.

ஆனால் அச் சந்தேக நபர் தப்பிச் சென்று விட்டார்.

இந்நிலையில் தப்பிச்சென்ற நபரை திரும்பப்பிடிக்கவும் அந்நபர் தப்பிச் செல்கின்றமைக்கு உடந்தையாக யாரேனும் பொலிஸ் அதிகாரிகள் செயற்பட்டிருக்கின்றனரா? என கண்டு பிடிக்கவும் விசேட பொலிஸ் அணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஜனாதிபதியைவிட செல்வாக்கானவர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய

## இந்தியப் பத்திரிகையில் தகவல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் காட்டிலும் இலங்கையில் மிகவும் செல்வாக்கான நபர் ஒருவர் இருக்கிறார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களில் ஒருவரும் பாதுகாப்பு அமைச்சு செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவே அந்நபர் ஆவார் என்று இந்தியாவில் இருந்து வெளிவரும் த பீனர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அப் பத்திரிகையில் இது தொடர்பில் தெரிவிக் கப்பட்டிருப்பவை வருமாறு,

புலிகளுடனான போரில் வெற்றி பெற்ற பிற்பாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் கதாநாயகர்களில் ஒருவராக உள்ளார்.

ஏனைய ஜனாதிபதிகளுக்கு இருந்திராத செல்வாக்கு இவருக்கு உண்டு. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். இவரது நேரடிப்பொறுப்பில் 78 ஸ்தாபனங்கள் உள்ளன. பாதுகாப்பு அமைச்சு, நிதி அமைச்சு, திட்டமிடல் அமைச்சு, துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சு, பெருந் தெருக்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சரும் இவரே.

ஆனால் இவரைக் காட்டிலும் மிகவும் செல்வாக்கு மிக்க ஒரு நபர் இருக்கத்தான் செய்கிறார். அவர் வேறுயாரும் அல்லர். ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவே அந்நபர்.

இவர் கஜபாகு படைப்பிரிவில் கடமையாற்றிய கேணல்களில் ஒருவர். பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருப்பவர். புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுப் பதற்காக 2005ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து கூப்பிடப்பட்டவர்.

வரவு -செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவினங்களுக்கு என இம்முறை ஒதுக்கப்பட்டிருக்கும் 202 பில்லியன் ரூபாய்க்கு பொறுப்பாக இருப்பவர்.

இவரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இராணுவம், கடற்படை, புலனாய்வுப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், சுற்றுலாத்துறை சம்பந்தப்பட்ட சில விடயங்கள் போன்றன இருக்கின்றன.

அமைச்சர்கள் கூட இவர் மீது பயம் கலந்த மரியாதை வைத்திருக்கிறார்கள். இவர் நாடாளுமன்றத்துக்கு பதில்கூறவேண்டியநிலையில் இல்லை.

இவருடைய பார்வையில் இலங்கைப் பிரஜைகள் இருவகையினர். தேசாபிமானிகள், துரோகிகள் என்று பிரித்து வைத்திருக்கிறார்.

1990களில் இவரின் மிகவும் நெருக்கமான கூட்டாளியாக இருந்தவர் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா. இன்று கோத்தபாய வின் மிகப் பெரும் எதிரியும் இவரே என்றுள்ளது. (ச-5)

# உச்ச நீதிமன்ற நீதவான்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்?

## எதிர்க்கட்சிகள் முயற்சி

(கொழும்பு)

கடமையை உரிய முறையில் மேற்கொள்ளாத உச்ச நீதிமன்ற நீதவான்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற எதிர்க்கட்சிகள் முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கருஜெயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, தயாசிறி ஜயசேகர, விஜயதாச ராஜபக்ஷ, லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவதற்கு தேவையான தகவல்களை எதிர்க்கட்சியினர் திரட்டிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

17ஆவது திருத்தச்சட்ட மூலம் அமுல் படுத்தாது, நிறை வேற்று அதிகாரத்தினால் நேரடியாக நீதவான்கள் நியமிக்கப்படுவ தாக ஐக்கியதேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நம்பிக்கையில்லாத்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதனைத் தவிர வேறு வழியில் தமது எதிர்ப்பை வெளியிட முடியாது என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பக்கசார்பான தீர்ப்புகளை வழங்கும் சிலர் உச்ச நீதிமன்ற நீதவான்களுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் கோரியிருந்தார்.

வரவு செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் பூர்த்தியானதன் பின்னர், நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த பேரணை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப் படவுள்ளது.

இதேவேளை வெளிவிவகார அமைச்சருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற ஐக்கியதேசியக் கட்சி உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# புனர்வாழ்வு நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் இருந்து அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி யாழ். மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளனர்.

அன்றையதினம் இவர்கள் புனர்வாழ்வு நடமாடும் சேவையினை நடத்தவுள்ளனர். இந்த நடமாடும் சேவை தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

எனவே இந் நடமாடும் சேவையில் பங்கு கொண்டு தங்களது பிரச்சினைகளை முன்வைத்து தீர்த்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இக்குழுவினர் யாழ்ப்பாணம் சிறைச் சாலையை அன்று பிற்பகல் ஒரு மணியளவில் பார்வையிட விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். (ச)


ஜயசர

VEGITABLE CUTTER 2 in 1





MEAT MINCER

ஹோட்டல் தேவைகளுக்கான மரக்கறி வகைகளை இலகுவான வழிகளில் மிகக் குறுகிய நேரத்தில் வெட்டிக் கொள்ளக் கூடியதான சிறிய வகை இயந்திரம்

ஹோட்டல் தேவைகளுக்கான இறைச்சி மற்றும் கொத்துரொட்டி வெட்டுவதற்கான சிறிய வகை இயந்திரம்



Cake Mixer

காஸ் அவண்,
கேக் கலவை இயந்திரம்
ஆழ்நிலை எண்ணெய் பாத்திரம்,
வெங்காயம் வெட்டும் இயந்திரம்
பொம்பாய் முட்டாய் இயந்திரம்
மா கலவை,
பொப் கோர்ன் இயந்திரம்
காஸ் ரைஸ் குக்கர்,
இறைச்சி அரைவை இயந்திரம்
கூல்ட்ரிங்ஸ் டிஸ்பென்சர்
உள்ளிட்ட தெரிவு செய்த
ஏராளம் உபகரணங்கள்.



Pop Corn Machine

விற்பனைக்கு
பிந்திய சேவை
உத்தரவாதம் உண்டு

பேக்கரி, கேட்டரிங், ஹோட்டல் உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகிப்போர்

79, வேல்ஸ் குமார மாவத்தை, கொழும்பு-14.
தொ.பே: 0112336401 , 0777514112



கணனி மூலம் கட்டிட வரைபடம் வரையும் தொழில் நுட்பவியலாளர்களுக்கான இலவச தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு!!!

(Mega Engineering CAD with 3D Building Technology)

FREE SEMINAR !!! FREE SEMINAR !!!

- காலம் :- 11/07/2010 (ஞாயிற்றுக் கிழமை)
- நேரம் :- மாலை 2.00 - 5.00 மணிவரை
- இடம் :- UNI - ICT Campus No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் இன்றே கீழே உள்ள எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து வருதல் வேண்டும். முற்பதிவு செய்வோர் மட்டுமே இக் கருத்தரங்கில் பங்குபற்ற அனுமதி வழங்கப்படும்.

எமது தொலைபேசி இலக்கம் - 021 - 321 - 6433 / 078 911 42 08

Projector மூலம் இப் பயிற்சி கருத்தரங்கு நடைபெற உள்ளது. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

மாதம் 40000/= மேல் நீங்கள் சுயமாக உழைக்க முடியும்.





28.06.2010 முதல்

அருண் விஜய், பிரபு, கார்த்திக், விஜயகுமார் மற்றும் பலர் நடிப்பில்

மாஞ்சா வேலு

செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

(C-588)





ஸ்ரீ ஸ்ரீ மஞ்சுநாதா ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

தனஞ்செயன் சாஸ்திரி
077 0366383

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

K.R.V. INN
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் முன்பாக)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்க்கப்படும்.

(1882)

# இன்று ஒரு தகவல்

## நல்ல பெயர்

என்னுடைய நண்பர் ஒருத்தர் தலையைப் பிய்த்துக் கொண்டே வந்தார். இது எனக்கு வித்தியாசமான அனுபவமாகப் பட்டது. வழக்கமாக நம்மிடம் வருபவர்கள் திரும்பிப் போகும் போது தான் தலையைப் பிய்த்துக் கொண்டு போவார்கள்.

இவர் என்ன வரும்போதே தலையைப் பிய்த்துக் கொண்டு வருகிறாரே.... என்று யோசித்தேன்.

"என்ன விடயம்? "என்றேன்.

"எனக்கு மகன் பிறந்திருக்கிறான் "என்றார்.

"அப்படியா? மகிழ்ச்சிக்குரிய செய்தியாச்சே... அதற்கு ஏன் இப்படி ஆகிவிட்டீர்கள்?"என்று கேட்டேன்.

"அவனுக்குப் பெயர் வைக்க வேண்டும் நல்ல பெயராக அமையவேண்டும். அதுதான் என்ன பெயர் சூட்டலாம் என்று யோசித்துக் கொண்டு வருகிறேன் "என்றார்.

உடனே அது சம்பந்தமாக எனக்குத் தெரிந்த செய்திகளை அவரிடம் சொன்னேன்.

மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? குழந்தையை பெற்றவர்கள் பொதுவாக முதல் குழந்தைக்குப் பெயரைத் தேர்ந்தெடுப்பது எப்படி என்பதை அவர்கள் சொல்கிறார்கள்.

குழந்தையைப் பெற்றவர்கள் அதன் எதிர் காலம் எப்படி அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ அல்லது யார் மாதிரி தங்கள் குழந்தை ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ அப்படிப்பட்ட பெயரைத்தான் சூட்டுகிறார்களாம்.

தன்னை மிகவும் வசீகரித்துள்ள மகான் , தலைவர் , விஞ்ஞானி , உறவுக்காரர் , நண்பர் ,ஆசிரியர் , பாட்டனார்- இப்படி ஏதாவது ஒரு இலட்சியத்தோடுதான் முதல் குழந்தையின் பெயரை 75 வீதமானோர் தேர்ந்தெடுக்கிறார்களாம்.

நன்றாக வாழ்ந்தவர்கள் அல்லது வாழ்பவர்கள் பெயரைக் குழந்தைக்கு சூட்டும் போது அந்தக் குழந்தைக்கு நாமும் அந்தப் பெயருக்குத் தகுந்தாற்போல் உயர வேண்டும் என்ற உந்து சக்தி இயல்பாகவே வளர்கிறதாம்.

சிலபேர் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக குழந்தைகளுக்கு விநோதமான பெயர் எதையாவது வைத்துவிடுவது வழக்கம். இப்படியான பெயர்கள் சிலநேரம் மற்ற பிள்ளைகள் கேலி செய்யும் அளவுக்கு ஆகிவிடும். அதனால் சண்டை பிடிக்க வேண்டியிருக்கும். இது பிற்காலத்தில் முரட்டுத்தனம் வளர வழிவகுப்பது போலாகிவிடும்.

அண்மையில் ஒரு ஆராய்ச்சி நடந்ததாம். ஆராய்ச்சியாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்... விபரீதமான பெயருடையவர்கள் மற்றவர்களைவிட நான்கு மடங்கு அதிகமாக சட்டத்தை மீறியவர்களாக இருக்கிறார்கள்-என்று சொல்கிறார்கள்.

இன்னும் சிலருக்கு ஒருவித தாழ்வுமனப்பான்மை ஏற்பட்டு ஒதுங்கி வாழ ஆரம்பித்து விடுகிறார்களாம். எதற்கும் உபயோகமில்லாதவர்களாக ஆகிவிடுகிறார்களாம்.

அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஒரு மனநோய் மருத்துவ ஆராய்ச்சி நடந்தது.

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்... விசித்திரமான விபரீதமான அர்த்தம் தொனிக்கும் பெயருடையவர்கள் தாம் அதிகளவில் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்களாம்.

லண்டனிலுள்ள டாக்டர் ஒருவர் என்ன சொல்கிறார் என்றால்...

" ஒருவருடைய பெயரானது அவருடைய உடல் நலத்தையும் கூட பாதிக்கவல்லது"என்கிறார்.

இப்படியெல்லாம் கேள்விப்படும் போது நமக்கே நம்புவதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் சிந்திக்க வேண்டிய கருத்துக்கள்.

"ஒரு நல்ல தமிழ்ப் பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுங்கள். நான் ஒரு தமிழன் என்று அடையாளம் காட்டவே" என்று பாடினார் கலைமாமணி கவிஞர் நா.மா.முத்துக்கூத்தன்.

"தமிழ்ப் பண்பு வளரவே தமிழினில் பெயர் சூட்டுவோம்" என்றார் தமிழ்மாமணி கவிஞர் சீனி திருநாவுக்கரசு. அதனால் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும் போது கவனம் தேவை.

ஆனால் இந்தக் காலத்துப் பிள்ளைகள் ரொம்ப முன்னேறியிருக்கிறது இந்த விடயத்தில்.

அன்றைக்கு ஒரு சின்னப் பையனைப் பார்த்துக் கேட்டேன்.

" என்னப்பா... பள்ளிக் கூடத்தில் சேர்ந்திட்டியா?" என்றேன்.

"சேர்ந்திட்டேன்"

"உங்க டீச்சர் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"இன்னும் நாங்க வைக்கவில்லை"என்கிறான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதோருக்கான விசேட திட்டம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களுக்கு இலங்கையில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்படாமல் முதலீட்டுச்சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட 73 தனியார். பல்கலைக்கழகங்கள் இலங்கையில் உள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அமைப்பொன்றை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுள் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் சித்தியடைந்துள்ள்னர். இவர்களுள் 40 ஆயிரம் பேர் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றனர். இவர்களுள் 22 ஆயிரத்து 800 பேர் பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்கப்பட்டனர். சுமார் 4 ஆயிரம் பேர் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதி பெற்றனர். சுமார் 5 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

சுமார் 10 ஆயிரம் பேர் வரையில் எஞ்சியுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

இவர்களுக்குத் தனியார் பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய நிலையம் மற்றும் யு.என்.டி.பி. நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சிவில் சமூகங்களூடாக மனித உரிமையை மேம்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 657/1 , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் அறிவித்துள்ளார். (6-4)

## மாணவர்களுக்கான பதிவுகளும் விண்ணப்பங்கோரலும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010 /2011 ஆம் கல்வியாண்டுக்கான சட்டவியல் கற்கை நெறிக்கு விண்ணப்பித்து தெரிவான மாணவர்களுக்கான பதிவுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரையும் சட்டவியல் கற்கை நெறிக்கான மீள்பதிவுகள் எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரையும் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் எனவும் மாணவர்கள் அனுமதிக் கடிதத்தில் குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் ஆங்கில சான்றிதழ் கற்கைநெறிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று படிவத்தினை பூர்த்தி செய்து எதிர்வரும் 12 ஆம்திகதிக்கு முன்னர் யாழ். பிராந்திய நிலையத்தில் ஒப்படைக்குமாறும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6-4)

## புலமைப்பரிசில் முன்னோடி பரீட்சை

(கொழும்பு)

காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவிய ரீதியில் நடத்தும் புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் ஜுலை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.30 மணிவரை 300க்கு மேற்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் வே.நவமோகனின் வழிகாட்டலில் இடம்பெறும் இப்பரீட்சைக்கு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்ற உள்ளார்கள்.

இரண்டு பகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சை அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும். இதில் சித்தியடையும் மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களும் அதிக புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள காயத்திரி பப்ளி கேஷனின் பத்தாவது ஆண்டு விழாவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவருக்கு காயத்திரி இலச்சினை பொறிக்கப்பட்ட பதக்கங்களும், தேசியரீதியில்முதலிடம்பெறும் மாணவருக்கு 22 k தங்கத்தினாலான தங்கப் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் காயத்திரி புத்தகசாலை இல.257/1 F, காலி வீதி, வெள்ளவத்தை என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறும் மேலதிக விபரங்களை 0114981906,0774626278 என்றதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## இராசி பலன்

*08 .07.2010*
*(ஆனி 24, வியாழக்கிழமை)*
*ஏகாதசி காலை 7.02 மணிவரை*
*கார்த்திகை மாலை 6.42 மணிவரை*
*இராகுகாலம் 1.28-2.58 மணிவரை*
*சுபநேரம் 7.28-8.58 மணிவரை*
*ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம், அல்வாய் தெற்கு மாலை சந்திப் பிள்ளையார் கொடி.*


| | |
|---|---|
| மேடம் | விவாதம்,பணவிரயம், தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| இடபம் | சிந்தனை மிகுதி, போசன சுகம், முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | காரிய அலைச்சல், உஷ்ண வியாதி, தனவிரயம், தந்தைவழி உறவு. |
| கடகம் | முயற்சி கைகூடும், கீர்த்தி, பொருள் சேர்க்கை, உடல் நலம். |
| சிங்கம் | தொழில்நன்மை,பெரியோர் உதவி, தன்னம்பிக்கை, முயற்சி கைகூடும். |
| கன்னி | பித்தரோகம்,பிரயாணம், உறவினர் சந்திப்பு, காரியதாமதம். |
| துலாம் | வாகன பயம், முயற்சி தாமதம், பணவிரயம், கௌரவக்குறைவு. |
| விருச்சிகம் | களஸ்திர நன்மை, பிரயாண நன்மை, தன்னம்பிக்கை, பொருள் சேர்க்கை. |
| தனுசு | பகைவர் நேசம், முயற்சி பலிதம், போசன சுகம், தனவருவாய். |
| மகரம் | வியாபார நன்மை,வீண்பகை, முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| கும்பம் | மாதா வழி உறவு, சுபசெலவு, புதிய முயற்சி, போசன சுகம். |
| மீனம் | பிரயாண நன்மை, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 140 |
| தக்காளி | 80 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 70 | 70 |
| கரட் | 140 | 140 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 50 |
| பாகற்காய் | 80 | 120 | 50 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 50 | 80 | 70 |
| லீக்ஸ் | 140 | 140 | 130 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 130 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 150 |
| போஞ்சி | 80 | 80 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |





யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து மாகாண சபை திணைக்களங்களாலும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் அண்மையில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் அருகில் பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் உத்தியோகத்தர்கள் கலந்துரையாடுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

அல்வாய் மாலை சந்தி பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (4-35)

✠✠✠

(கரவெட்டி)

மாலுசந்தை ஸ்ரீ வரதராஜ ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும்16 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் கேணித் தீர்த்தமும் 18 ஆம் திகதி திருக்கல்யாணமும் நடைபெறும். (6-24)

✠✠✠

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்காத்தானை அருள் மிகு வைரவர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று வேட்டைத் திருவிழாவும் நாளை சப்பறத்திருவிழாவும் நாளை மறுதினம் தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (6-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2005 ஆம் ஆண்டு பட்டதாரி நியமனத்தின் கீழ் தேசநிர்மாண அமைச்சில் நியமனம் பெற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றும் அபிவிருத்தி உதவியாளர்களுக்கான கலந்துரையாடலும், யாழ். மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் ஒன்றியம் அங்குரார்ப்பண நிகழ்வும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் அபிவிருத்தி உதவியாளர்கள் தவறாது ஒன்றுகூடுமாறு ஒன்றிய ஏற்பாட்டாளர் கேட்டுள்ளார். (6-4)

## புனித செபஸ்தியார் பெருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பொன் புனித - செபஸ்தியார் பெருவிழா கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நாளை மறுதினம் சனிக்கிழமை நற்கருணை விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (6-72)

## பௌதிகவியல் ஒலிம்பியாட்

## போட்டிகளுக்கான தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

42ஆவது சர்வதேச பௌதிகவியல், 12 ஆவது ஆசிய பௌதிகவியல் ஒலிம்பியாட் ஆகிய போட்டிகளுக்கான தெரிவுப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 11.30 மணிவரை யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.பொ.த. உயர்தரப் வகுப்பில் பௌதீகவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்காக இப் பரீட்சை நடத்தப்படவுள்ளதால் இப் பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு முன் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை பௌதிகவியல் துறை, அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கும் இனி விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குமான அனுமதி அட்டை பரீட்சை தினத்தன்று மண்டப வாசலில் வைத்து வழங்கப்படும் என இப் போட்டிகளுக்கான வடமாகாண இணைப்பாளர் கலாநிதி நாகலிங்கம் சிவயோகன் தெரிவித்துளார். (6-4)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புகளுக்கு சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் காலை 8 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த பாட ஆசிரியர்கள் தவறாது சமுகம் தந்து ஒத்துழைக்கும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

✠✠✠

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கேத்திர கணிதம் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வடஇந்து கல்லூரியிலும், கரவெட்டி கோட்டப் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கேத்திர கணிதம் தொடர்பான செயலமர்வு 11ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறுமென கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ப. ஈஸ்வரதேவன் அறிவித்துள்ளார். (6-19)

## விழிப்புணர்வு கருத்தரங்கம்

(குருநகர்)

குருநகர் கல்வி முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் 5ஆவது சிறுவர் அணியினருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு கழகப் பணிமனையில் பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளையின் செயலாளர் திருமதி ஞானசீலன் மெரிசியா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் 'எதிர்கால சமுதாய வளர்ச்சியில் சிறுவர்களின்பங்கு' என்னும் விடயம் பற்றிய கருத்துரையை ஜே/71 கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஜே.எட்வின் வழங்கவுள்ளதுடன், நிறைவில் சிறுவர் நாடகப் பயிற்சிப் பட்டறை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (4-39)




## யாழ்.மாநகரசபை வேலைத் திட்டத்தின் மூலம் வீதிகள் புனரமைப்பு

(குருநகர்)

யாழ். மாநகரசபை வேலைத்திட்டத்தின் கீழ் குருநகர் பகுதிக்குட்பட்ட 6ஆம் குறுக்குத் தெரு, பாங்சால் வீதி, மவுண்கார்மேல் வீதி, தண்ணீர் தாங்கி வீதி போன்ற வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன.

முன்பு திருத்தப்பட்ட இவ் வீதிகளின் ஓரங்கள் தற்போது பழுதடைந்துள்ளதோடு வீதிகளின் அருகே மரங்கள், தேவையற்ற பொருட்கள், கற்குவியல்கள் போன்ற அத்துமீறிய செயற்பாடுகளால் வீதி ஒடுக்கமாகக் காணப்பட்டது.

இதனால் இத்தகைய குறைகளை நீக்கி தெருக்களை நல்ல முறையில் அமைத்துத் தருமாறு அப்பகுதி பொதுமக்களால் மாநகர சபை உறுப்பினர்களுக்கும், மாநகர அபிவிருத்தி நெல்சிப் திட்ட கொத்தணி கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இவ் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (4-39)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி ராஜேஸ்வரி நந்தகுமார் கலந்துசிறப்பிக்கவுள்ளார். (6-4)

✠✠✠

(அல்வாய்)

புலோலி புற்றளை மகா வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் மு. அனந்தேஸ்வரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக பழைய மாணவரான கண்டி போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி வா. பேரின்பரூபன் கலந்து சிறப்பிப்பதுடன் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-19)

## புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(மருதங்கேணி)

புலோலி கிழக்கு கிராமேசவகர் பிரிவில் உள்ள முதியோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் கிராம அலுவலர் மு.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக ந. தர்மகுலசிங்கம், உபதலைவராக வே.ஆழ்வாப்பிள்ளை, செயலாளராக சு.கணபதிப்பிள்ளை, உபசெயலாளராக சு.சுப்பிரமணியம், பொருளாளராக ஏ.செல்லப்பா ஆகியோரும் உறுப்பினர்களாக மு.கந்தசாமி, பொ.குலவீரசிங்கம், சு.மகேஸ்வரி, சு.சிவக்கொழுந்து, சு.சரஸ்வதி, வி.உமையாத்தை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-35)

## இம்மாத ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது


(பருத்தித்துறை)

யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களின் ஜூலை மாத ஓய்வூதியம் நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளது. உரியவர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் திணைக்களங்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (6-10)

## இன்னிசைக் கச்சேரி

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நுண்கலைமாமணி என்.தயாபரநாதனின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (4-35)



யாழ். மத்திய கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றத்தினால் மரம் வளர்ப்போம் மாநிலம் காப்போம் என்னும் தொனிப்பொருளின் கீழ் மரம் நடும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி மன்றத்தின் பகுதித்தலைவர் ஆர்.இராஜேஸ்வரன் மற்றும் மன்ற மாணவர்கள் ஆகியோர் மரம் நடுவதை படங்களில் காணலாம்.

## கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

கதிர்காம ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 25 ஆம் திகதி இரவு போயா தினத்தன்று மகா பெரஹரா இடம் பெறும். 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நீர்வெட்டு எனப்படும் நிகழ்வு மாணிக்க கங்கையில் இடம்பெற்று வருடாந்த உற்வசம் நிறைவுபெறும். (6-4)

# பக்கச் சார்பற்ற முறையில் அரசின் செயற்பாடுகள் அமைய வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு இனத்தை திருப்திப்படுத்துவதற்காக இன்னொரு இனத்தின் உரிமைகளை உதாசீனம் செய்ய முடியாது என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் பாராளுமன்றில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களுக்காக புதிதாக அமைக்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவானது வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இன்னும் பதிவு செய்யப்பட வில்லை. காரணம் இன்னொரு இனத்தை திருப்திப் படுத்தவே தான் அரசு இவ்வாறு காலம் தாழ்த்துகின்றது.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாகத்தான் இந்த மாகாண சபைகள் அறிமுகம் செய்யப்பட்டன. ஆனால் என்ன நடந்தது? 13ஆவது திருத்தச் சட்டத்தில் சொல்லப்பட்டதைப் போன்று கூடுதல் அதிகாரங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டதா? இல்லை.ஒரு மலசல கூடத்தை துப்பரவு செய்கின்ற தொழிலாளியைக் கூட நியமனம் செய்வதற்கு முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என கிழக்கு மாகாண முதலமைச்சர் சொல்லியிருக்கிறார் எனவே அதிகாரம் இல்லாத சபையாகத் தான் மாகாண சபைகள் காணப்படுகின்றன.

மேலும் இலங்கையில் எத்தனை ஆட்சி மொழிகள் இருக்கின்றன? தமிழ் ,சிங்களம் என் இரண்டு தான் என்றால் ஏன் ஆங்கில மொழி ? கூடுதலான அரச கருமங்கள் ஆங்கில மொழியில் தான் நடைபெறுகின்றன. அவ்வாறாயின் ஆங்கிலத்தையும் அரச கரும மொழியாக அரசு அறிவிக்க வேண்டும். பாமர மக்கள் கலந்துகொள்கின்ற வைபவங்களிலும் கூட ஆங்கில மொழியில் தான் கருமங்கள் நடைபெறுகின்றன. மற்றும் திணைக்களங்களில் அறிவுறுத்தல்கள், சுற்று நிருபங்கள் அநேகமாக ஆங்கிலத்தில் இடம்பெறுவதை காண்கின்றோம்.

எனவே இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து அந்தந்தப்பிரதேசங்களுக்கு அமைய தமிழ் ,சிங்கள மொழிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும் என தனது உரையில் தெரிவித்தார். (6-4)

# சம்பவ இடத்திலிருந்து உடனடியாக அகற்றப்பட்ட கலகம் அடக்கும் பொலிஸார்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு முன் தேசிய சுதந்திர முன்னணியினர் நேற்று முன்தினம் நடத்திய போராட்டத்தின் போது அதனை கலைக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட பொலிஸாரின் தண்ணீர் விசிறும் இயந்திரங்கள் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸாரின் வாகனங்கள் என்பன அமைச்சர் விமல் வீரவன்ச தொலைபேசியில் யாருடனோ தொடர்பு கொண்டதை அடுத்து சம்பவ இடத்திலிருந்து உடனடியாக அகற்றப்பட்டன.

போராட்டத்தின் மத்தியில் ஐ.நா. அலுவலகத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர்களை பொலிஸார் பாதுகாப்புடன் வெளியேற்றினர்.

இதன்போது ஐ.நா. அலுவலக பகுதியில் பொலிஸாரின் 30க்கும் மேற்பட்ட வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

அவ்வேளை அங்கு வந்த அமைச்சர் விமல் வீரவன்ச தனது கைடக்கத்தொலைபேசியில் யாருடனோ தொடர்பு கொண்டார். அழைப்பில் நின்றவரை பொலிஸ் அதிகாரியுடன் அவர் பேச வைத்தார்.

அதன் பின்னர் அங்கு நின்றிருந்த 200க்கும் மேற்பட்ட கலகம் அடக்கும் பொலிஸாரின் வாகனங்கள் உடனடியாக அகற்றப்பட்டது. பொலிஸார் திரும்பி சென்று கொண்டிருந்த போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூக்குரல் எழுப்பியதாக கூறப்படுகிறது. (6)

19
வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
July.2010 to Dec..2010
தமிழ் மொழி மூலம்
- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010

# அரசாங்க அறிவித்தல்

நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான ஆனி, ஆடி மாத நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது.

1. சிவப்பு நாட்டரிசி
2. கோதுமை மா
3. சீனி
4. பருப்பு

இப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறு விலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருட்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்பு பணமாக ரூபா 5,000.00 உம், மீளளிக்க கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் "நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களுக்கான கூறுவிலை" என குறிப்பிட்டு 16.07.2010 ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது பொருட்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பாக பொருட்களின் தரம், கேள்வி, நிபந்தனைகள் மற்றும் விண்ணப்படிவங்களை மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்துடன் தொடர்பு கொண்டு 08.07.2010 முதல் பெற்றுக் கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 16.07.2010 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமூகமளித்திருக்க முடியும்.

பொருட்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரத்தினுள் நாவற்குழி களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைத்தல் வேண்டும். கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

க.கணேஷ்,
அரசாங்க அதிபரும் / மாவட்ட செயலரும்,
யாழ்.மாவட்டம்.

(சி/608)











மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வந்த கிரிக்கெட் போட்டிகளின் இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.காங்கரா வீரர்களுக்கு கைலாகு கொடுத்து அறிமுகம் செய்வதை முதலாவது படத்திலும் 5ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் சம்பியனாகிய கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகத்தை இரண்டாவது படத்திலும் இரண்டாம் இடத்தைப் பெற்ற தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தை மூன்றாவது படத்திலும் ருவெண்ரி 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியாகிய கரவெட்டி மகேசன் அணியினரை நான்காவது படத்திலும் இரண்டாம் இடத்தைப் பெற்ற அல்வாய் கலைமகள் விளையாட்டுக்கழகத்தை ஐந்தவாது படத்திலும் காணலாம். (படங்கள்: செல்வதீபன்)

# ஐ.நா. அலுவலகம் முன்பான ஆர்ப்பாட்டம் பாதகமான நிலையை தோற்றுவிக்கும்

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பு இடம்பெற்ற ஆர்ப்பாட்டமானது இலங்கைக்கு பாதகமான விளைவுகளை தோற்றுவிக் கக்கூடும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

யு.என்.எச்.ஆர். போன்ற நிறுவனங்கள் இலங்கை சிறார்களுக்கு பல உதவிகளை செய்து வருகிறது.

இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் காரணமாக அவ் அமைப்புக்கள் செய்து வரும் உதவிகள் இல்லாமல் போகலாம் என தெரிவித்துள்ளார். (6)

# அம்பாறை கல்வி வலய அதிபர் பிரச்சினைக்கு முடிபு

(கொழும்பு)

அம்பாறை கல்வி வலயத்தில் இதுவரை கடமைக்கு சமூகமளிக்காத அதிபர்கள் தொடர்பில் தீர்மானம் மிக்க முடிவொன்றை எடுக்கவுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

அம்பாறை கல்வி வலயப் பாடசாலைகளில் பணியாற்றிவந்த 52அதிபர்களுக்கு அண்மையில் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

இவர்களில் 32 அதிபர்கள் மாத்திரமே சேவைக்கு சமூகமளித்துள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உப்புல் வீரவர்த்தன தெரிவித்தார்.

உரிய நடைமுறைக்கு மாறாக தமக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அதிபர்கள் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# முல்லைத்தீவில் இருந்து தூர இடங்களுக்கான தனியார் பஸ் சேவைகளை ஆரம்பிக்கத்திட்டம்

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கும் மட்டக்களப்பு மற்றும் கொழும்பு,கண்டி போன்ற தூர இடங்களுக்கு இடையிலான தனியார் பஸ்சேவைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு தனியார் பஸ் கம்பனியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சேவைக்கான வழி அனுமதியை பெறுவதற்காக முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் விண்ணப்பித்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் செயற்பட்டு வருகின்ற தனியார் பஸ் கம்பனி, முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நாள்தோறும் நான்கு பஸ் சேவைகளை நடத்தி வருகிறது.

அத்துடன் முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கு எட்டு சேவைகளும் வவுனியாவிலிருந்து முல்லைத்தீவிற்கு நான்கு சேவைகளுமாக ஒரு நாளைக்கு 12 சேவைகள் நடத்தப்படுவதாகவும் நவநீதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவில் இருந்து மாங்குளம்,மல்லாவி,வெள்ளாங்குளம் ஊடாக மன்னாருக்கு ஒரு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. முல்லைத்தீ வில் இருந்து காலை 6 .15 மணிக்கு புறப் படும் இந்த பஸ் மன்னாருக்குச்சென்று அங்கிருந்து பி.ப.1.30 மணிக்கு முல்லைத்தீவை நோக்கிப் புறப்பட்டு வெள்ளாங் குளம், மல்லாவி,மாங்குளம் வழியாக முல்தைத்தீவை வந்தடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வவுனியா மக்கள் போக்குவரத்துச் சேவைக்கு சொந்தமான இரண்டு பஸ் சேவைகள் முல்லைத்தீவுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதே போன்று யாழ்ப்பாணத்தில் இருந்தும் இரண்டு இ.போ.ச. பஸ் சேவைகள் முல்லைத்தீவுக்கு நடத்தப்படுகின்றன என்பதும் முல்லைத்தீவு நகரத்தில் இன்னும் இ.போ.ச. டிப்போ அமைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமார் 20 வரையிலான வர்த்தக நிலையங்கள் செயற்படத்தொடங்கியுள்ள முல்லைத்தீவு நகரத்தின் பழைய இ.போ.ச. பஸ் நிலையத்திலேயே தனியார் பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடம் இ.போ.ச.வுக்குச் சொந்தமான தாகையால் தனியார் பஸ்களுக்கென வேறு இடத்தில் பஸ் நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இராணுவமும், அரச அதிகாரிகளும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# காயங்கேணி கிராமத்தில் தொல்பொருட்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வரலாற்றில் முதன் முறையாக வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காயங்கேணி கிராமத்திலிருந்து இராசதானி தொல்பொருள் கட்டடங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இப்புராதன தொல்பொருட் கட்டடங்களை வாகரை பிரதேச செயலாளர் திருமதி எஸ்.இராகுலநாய்கி தலைமையிலான உயர் மட்ட குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை தொல்பொருள் ஆய்வாளர்கள் கொழும்பிலிருந்து வரவுள்ளதாக வாகரை பிரதேச செயலகம் தெரிவித்துள் ளது. (6)

# பனம்பொருள் உற்பத்திகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பனம் பொருள் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் 30 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் கைதடியில் உள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கு இந்திய அரசாங்கம் 85 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது முன் எடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் மற்றும் நடவடிக்கைகள் காரணமாகவே இந்நிதியுதவிகள் பெறப்பட்டுள்ளன.

நாட்டில் பனைவளம் சார்ந்த உற்பத்திகளை தரமாகவும் நவீனமான முறையில் மேற்கொள்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் அமுலாக்க திட்டமிடப்பட்டுள்ளன.

நாட்டில் பனைவளம் சார்ந்த உற்பத்திகளை தரமாகவும் நவீனமான முறையில் மேற்கொள்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் அமுலாக்க திட்டமிடப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கில் ஏழு மாவட்டங்களில் தற்போது பனை அபிவிருத்தி சபையின் விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன. இவற்றை ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக பதவியேற்றுள்ள பசுபதி சீவரட்ணம் மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# இலங்கை விவகாரங்களில் சர்வதேச தலையீடு குறித்து கல்விமான்கள் கருத்து

(கொழும்பு)

பொது அமைப்புக்களின் நடவடிக்கைகள் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்காத நிலையில் இடம்பெறவேண்டும் என்று பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானபீட சிரேஸ்ட விரிவுரையாளர் தம்பதிஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு விரோதமான கருத்துக்களை கொண்டிருக்கும் நாடுகளையும் அமைப்புக்களையும் இலங்கைக்கு சாதகமாக்கும் பொறுப்பு உள்ளதாக குறிப்பிட்ட அவர் இது தொடர்பாக நாட்டின் தனித்துவத்திற்கு கேடு விளைவிக்காமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

இந்த உரையாடலில் கலந்துகொண்ட கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ ஐ.நா.செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழு தகுதிவாய்ந்ததல்ல என்றார்.

அவ்வாறு இலங்கை தொடர்பாக குழு ஒன்றை நியமிப்பது இராஜதந்திர முயற்சியாக அமையமாட்டாது எனவும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் அல்லது பாதுகாப்புச் சபையில் நடத்தப்படும் கூட்டமொன்றிலே இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பெயருக்கு ஏதாவது களங்கம் ஏற்படுத்த முற்படுவாராயின் அது பாரிய குற்றமாகும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க கூறினார்.

சர்வதேச அமைப்புக்கள் இலங்கையின் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (6-4)

# உச்சநீதிமன்ற நீதவான்களுக்கெதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்ற முயற்சி

(கொழும்பு)

கடமையை உரிய முறையில் மேற்கொள்ளாத உச்சநீதிமன்ற நீதவான்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்ற எதிர்க்கட்சிகள் முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித்தலைவர் கருஜயசூரிய, பாராளுமன்றஉறுப்பினர்களான மங்கள சமரவீர, தயாசிறி ஜயசேகர, விஜயதாச ராஜபக்ஷ, லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் குறித்து பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

17ஆவது திருத்தச் சட்டமூலம் அமுல்படுத்தாது, நிறைவேற்று அதிகாரத்தினால் நேரடியாக நீதவான்கள் நியமிக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளதோடு,

நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதனைத் தவிர வேறு வழியில் தமது எதிர்ப்பை வெளியிட முடியாதென எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை, பக்கச் சார்பான தீர்ப்புக்களை வழங்கும் சில உச்ச நீதிமன்ற நீதவான்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர சில தினங்களுக்கு பாராளுமன்றில் கோரியிருந்தார்.

வரவு செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் பூர்த்தியானதன் பின்னர் நம்பிக்கையில்லாத தீர்மானம் குறித்த பிரேரணை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சி உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஐ.நா.அலுவலகம் முற்றுகையிடப்பட்டமை நாட்டின் நற்பெயருக்குக் களங்கம்


## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் நேற்று முன்தினம் முற்றுகையிடப்பட்டதானது நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை காரணமாக சர்வதேசத்தின் முன்னால் இலங்கை தலைகுனிய வேண்டிய நிலை ஏற்படும் என்றும், இலங்கை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு விவகாரமானது வேறு வகையில் எதிர்நோக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும் என்றும் ரணில் விக்கிரமசிங்க சபையில் கூறினார்.

அமைச் சர் விமல் வீரவன்ச தலைமையிலான ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் கொழும்பு ஐ.நா. அலுவலகத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட்டமை குறிப்பிடத்தக்கது. (6)



# எதிர்க்கட்சித் தலைவருக்கும் வெளிநாட்டு தூதுவர்களுக்குமிடையில் இன்று சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்ட அமைச்சர் விமல்வீரவன்ச அங்கிருந்த பணியாளர்களை பணயக் கைதியாக்க மேற்கொண்ட முயற்சி தொடர்பாக எதிர்க்கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காகவும், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக கருத்துக்களை வெளியிடுவதற்கும் வெளிநாட்டு தூவர்களை இன்று முற்பகல் நாடாளுமன்றத்திற்கு அழைப்பதற்கு எதிர்க்கட்சித் தலை வர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஏராளமான தூதுவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்த விசேட கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய, அந்தக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான தொடர்பாளர் ரவி கருணாநாயக்க, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம், ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைவர் ஜெனரல் சரத்பொன்சேகா ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். (6)

# 184 இலங்கை அகதிகளுக்கு அரசியல் அந்தஸ்து வழங்க திட்டம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 184 இலங்கை அகதிகளுக்கான அரசியல் அந்தஸ்து வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தத் தகவலை அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ஜீலியாட் கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்ட இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிக அகதிகள் வரும் பட்சத்தில் அவர்களுக்கான அந்தஸ்து வழங்கும் நடவடிக்கைகள் நிராகரிக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆட் கடத்தல்காரர்களுக்கு பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் எனவும் அபாயகரமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அவர் இலங்கைப் பொது மக்களை கோரியுள்ளார்.

அவ்வாறு அவுஸ்திரேலியாவுக்கு வருபவர்கள் உடனடியாக வானூர்தி மூலம் நாடு கடத்தப்படுவர் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (6-4)


## இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



www.inuvilkanthan.com

### இருபத்திரண்டாம் திருவிழா

### அருள் நிறைந்த ஆறுமுகன்

அருள் பெருகும் ஆனந்தம் தான் பெருகும்
அடியவர் தம் நெஞ்சுருக்கும்
மருள் கொண்டார் மயக்கம் அறுக்கும்
மாண்புடையார் வாழ் இணுவிலுறை
அருள் நிறைந்த ஆறுமாமுகத்து வள்ளல் கைவேலே
துயர் துடைத்து உய்விப்பான்
இருளகற்றி இடர்தீப்பான் இணுவில்
மதி நொச்சியம் பதிலுறை முருகன்

திருமதி வை.கணேசபிள்ளை ஆசிரியர்

### மனத்தினில் நீ ஆடுவாய்

இணுவையம் பதியினில் இருந்தருள் புரிகின்ற
எழிலான வடிவேலவா
மணியொலி ஒலித்திடும் வேளைகள் தொறும் எந்தன்
மனத்தினில் நீ ஆடுவாய்

மங்கலம் நிறைவேளை மனத்தினில் இருந்தென்றும்
மகிழ்வினை நீ ஊட்டுவாய்
சங்கடம் வரும்வேளை தனில் உந்தன் தனில்வேல் நம்
துயர்போக்க வரும் நாளுமே

வாழ்வினில் துயர்சோகம் மகிழ்வென்னும் எதுவரினும்
மாறாத மனம் வேண்டுமே
தாழ்வையும் சகித்தேற்றுச் சடுதியில் உயர்ந்தோங்க
தருவாய் நீ அருள்க நாளுமே

கோப்பாய் சிவம்

### நீயே கதி

இணுவையிலே வீற்றிருக்கும் இனியவேல் முருகா
உலகப்பெரு மஞ்சம் ஏறும் உலகநாதன் மருகா
வெள்ளி மயிலேறும் வெற்றிவேல் முருகா
பன்னிரு கையுடை ஆறுமுக வேலா
உன்பாதம் பற்றியவர்க்கு நீயே கதி

இணுவை சி.யதுகுலன்


(1709)



# றோலர் படகுகளை பயன்படுத்தி மீன்பிடித்தல் இடைநிறுத்தம்

(குருநகர்)

குருநகர் கடற்றொழிலாளர்கள் றோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதனால், இத் தொழிலை மேற்கொண்டு வந்த பல மீனவக் குடும்பங்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகவும் இவ்விடயத்தை உயர் அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-39)





சாவகச்சேரி மண்டுவில் சோலை அம்மன் ஆலய இரதோற்சவத்தில் வசந்த மண்டபப்பூசை இடம்பெறுவதையும் பக்தர்கள் புடைசூழ அம்பாள் தேரில் எழுந்தருளுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: - சாவகச்சேரி செய்தியாளர்)

# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

தரம்-13 முன்னோடிப் பரீட்சை ஆனி 2010

**இணைந்த கணிதம I நேரம் : 3 மணி**

**ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01.(a) $ax^2+bx+c=0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் $\alpha,\beta$ ஆகும்.

(i) தரப்பட்ட சமன்பாட்டில் பொருத்தமான உருமாற்றத்தைப் பயன்படுத்தி $2\alpha+3, 2\beta+3$ ஐ மூலங்களாகக் கொண்ட சமன்பாட்டைக் காண்க.

(ii) $x+2+\frac{1}{x}=\frac{b^2}{ac}$ இன் மூலங்களை $\alpha,\beta$இல் காண்க.

(b) $f(x)=k(x^2+4)+2x-3$ ஆகுக $(k\neq o)$

(i) $f(x)=0$ இன் மூலங்கள் மெய்யாகுமாறு $k$ இன் பெறுமானங்களைக் காண்க.


(ii) $x$ இன எல்லாப் பெறுமானங்களுக்கும் $f(x)>o$ ஆகுமாறு $k$ இன் பெறுமானங்களைக் காண்க.

$k=\frac{1}{2}$ , $k=1$ , $k=2$ ஆக $y=f(x)$ இன் வரைபுகளை பருமட்டாக வரைக.

02. (a) நேர் நிறையெண் சுட்டிக்குரிய ஈருறுப்புத் தேற்றத்தை (நிறுவலின்றி) கூறுக. $n$ யாதேனுமொரு நேர் நிறையெண்ணாக இருக்க. $11^{n+2}+12^{2n+1}$, 133 ஆல் வகுபடும் என நிறுவுக.

(b) $(1+x)^n$ இன் விரிவில் $x^{r-1},x^r,x^{r+1}$ என்பனவற்றின் குணகங்கள் ஒரு கூட்டல் விருத்தியில் அமையும் எனின் $n^2-n(4r+1)+(4r^2-2)=0$ எனக் காட்டுக.

(c) உருவில் தரப்பட்டுள்ள சதுரங்களில் ஒரு சதுரத்தில் ஒரு **"O"** மட்டும் இட வேண்டும். இவ்வாறான **6 "O"** உள்ளன. ஒருவரிசையில் குறைந்தது ஒரு **"O"** ஆவது வரத்தக்கதாக ஆறு வையும் எத்தனை வித்தியாசமான வழிகளில் இச்சதுரங்களில் இடலாம் எனக் காட்டுக.



03.(a) P என்பது ஒரு நேர்நிறையெண் ஆகும். எல்லா நேர்நிறையெண் $n$ இற்கும் $P^{n+1}+(p+1)^{2n-1}$, $p^2+p+1$ ஆல் வகுபடும் எனக் கணிதத் தொகுத்தறிமுறையால் நிறுவுக.

(b) (b) $Ur=\frac{r+4}{r(r+1)(r+2)}$ ஆகும்.

$ur=f(r)-f(r+1)$ ஆகுமாறு சார்பு $f(r)$ ஐக் காண்க.

(i) இதிலிருந்து $\sum_{r=1}^{n} Ur$ ஐக் காண்க.

$\sum_{r=1}^{n} Ur$ ஒருங்கு தொடர் என நிறுவி முடிவிலி வரைக்குமான கூட்டுத் தொகையைக் காண்க.

(ii) $ur=f(r)-f(r+1)$ என்பதை எழுதி, இதனை ஒழுங்குபடுத்துவதன் மூலம $ur=2vr-vr+1$ ஆகுமாறு $vr$ ஐக் காண்க. இதிலிருந்து

$\sum_{r=1}^{n}\frac{ur}{2^{r+1}}$ ஐக் காண்க.

04. Z என்பது ஒரு சிக்கலெண் ஆகும். $\frac{Z+2}{Z-2}=i$ எனின் Z ஐக் காண்க. இதிலிருந்து $|Z|$, $Arg(z)$ என்பவற்றைக் காண்க. சிக்கலெண் $Z=x+iy$ எனின் Z இன் உடன் புணரிச்சிக்கலெண் $\overline{Z}$ என்பது $\overline{Z}=x-iy$ எனவரையறுக்கப்படும். பின்வருவனவற்றை நிறுவுக. $Z_1$ , $Z_2$ இரு சிக்கலெண்களாகும்.

1) $Z\overline{Z}=|Z|^2$

2) $\left(\overline{Z_1Z_2}\right)=\overline{Z_1}\,\overline{Z_2}$

3) $|Z_1Z_2|=|Z_1||Z_2|$

(b) ஆகன் வரிப்படத்தில் $Z, Z^2, Z^3$ என்பவற்றால் குறிக்கப்படும் புள்ளிகள் சமபக்க முக்கோணி ஒன்றின் மூன்று உச்சிகளாகும்.

1) 3 புள்ளிகளும் ஒரு வட்டத்தில் அமையும் எனக் காட்டி, வட்டத்தின் மையம், ஆரை என்பவற்றைக் காண்க.

இதிலிருந்து 3 சிக்கலெண்களையும் காண்க.

05. (a) (a) $\ell im_{x\to 0}\frac{\sin x}{x}=1$ எனக்கொண்டு $\ell im_{x-0}\frac{\tan x}{x}$ ஐக் காண்க.

$\ell im_{x\to o}\frac{\tan 2x-x}{3x-\sin x}$

(b) $y=\frac{A\cos mx+B\sin mx}{x^2}$ எனின் $\frac{d^2y}{dx^2}+\frac{2n}{x}.\frac{dy}{dx}+\left\{\frac{n(n-1)}{x^2}+m^2\right\}y=O$ என நிறுவுக.

(c) யன்னல் ஒன்று அரைவட்டம் ஏற்றப்பட்டுள்ள செவ்வகவடிவத்தை உடையது. யன்னலின் மொத்தச் சுற்றளவு 20m ஆகும். யன்னலின் மொத்தப்பரப்பளவு உயர்ந்த பட்சமாக இருப்பதற்கான யன்னலின் பரிமாணங்களைக் காண்க.

(d) வளையியொன்று $x=a\cos\theta+a\theta\sin\theta$, $y=a\sin\theta-a\theta s\cos\theta$ என்பதால் தரப்படுகிறது. இங்கு a ஒரு மாறிலியும் $\theta$ ஒரு பிரமானமும் ஆகும். வளையியின் எந்த ஒரு புள்ளியிலுமுள்ள செவ்வன் உற்பத்தியிலிருந்து மாறாத் தூரத்தில் உள்ளது எனக்காட்டுக.

06. (a) பகுதிப் பின்னங்களாக்குவதன் மூலம் தொகையிடுக.

$$\int_1^2\frac{1}{x(x+1)^2}dx$$

(b) $\frac{d}{dx}\left(\frac{1}{\sqrt{1+x^2}}\right)$ ஐ எழுதுக. பகுதிகளாகத் தொகையிடுவதன் மூலம்

$\int_0^1\frac{x.\tan^{-1}x}{(1+x^2)^{\frac{3}{2}}}dx$ ஐக் காண்க.

(c) $\int_0^a f(x)dx=\int_0^a f(a-x)dx$ எனக் காட்டுக. $\int_0^{\frac{\pi}{4}}\tan(1+\tan x)dx=\frac{\pi}{8}\tan 2$ எனக் காட்டுக.

இதிலிருந்து $\int_o^1\frac{\tan(1+x)}{1+x^2}dx$ ஐ உய்த்தறிக.

07. $lx+my+n=0$ எனும் கோட்டின் மீது $(a,\beta)$ எனும் புள்ளியின் ஆடிவிம்பம் $(a+lt,\beta+mt)$ என்பதால் தரப்படும் எனக் காட்டுக. இங்கு

$t=\frac{-2(\ell\alpha+m\beta+n)}{\ell^2+m^2}$ ஆகும்.

முக்கோணி ABC இல் $A\equiv(1,-2)$ உம் AB, AC என்பவற்றின் செங்குத்து இரு கூறாக்கிகளின் சமன்பாடுகள் முறையே $x-y+5=0; x+2y=0$ ஆகும.

1) BC யின் சமன்பாட்டைக் காண்க.

2) முக்கோணி ABC யின் சுற்றுவட்டமையம் S, மையப்போலி G, நிமிர் மையம் H என்பவற்றின் ஆள்கூறுகளைக் காண்க. S, G, H ஒரு நேர்கோட்டில் உள்ள தெனக்காட்டி SG:GH:1:2 என வாய்ப்புப் பார்க்க.

# வன்னியிலுள்ள 10 ஆயிரம் பேருக்கு இவ்வருட இறுதிக்குள் வேலைவாய்ப்பு

## பிரதியமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியிலுள்ள 10 ஆயிரம் பேருக்கு இந்த வருட இறுதிக்குள் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்பதுடன் மூன்று ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் இலங்கையில் 5.3 மில்லியன் இளைஞர்கள் இருக்கின்றனர். இவர்களுக்காக 965 இளைஞர் கழகங்கள் செயற்படுகின்றன. இவற்றில் 3 இலட்சம் இளைஞர்களே அங்கம் வகிக்கின்றனர். இந்த எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வடக்கு கிழக்கு இளைஞர்களின் பக்கம் கடந்த 30 வருடங்களாக சகலரினதும் பார்வை திரும்பியிருந்தது. ஆனால் இன்று நாம் அந்த நிலைமையை மாற்றியுள்ளோம். அங்குள்ள இளைஞர்கள் எம்முடன் கை கோர்த்துள்ளனர்.

வன்னியில் வாழ்க்கை தொழில் பயிற்சி நிலையங்களையும் இளைஞர் சேவை மன்றங்களையும் ஆரம்பித்துள்ளோம். இதில் இணைவதற்கும் பயிற்சி பெறுவதற்கும் ஆர்வம் காட்டியுள்ளனர். வாழ்க்கை தொழில் பயிற்சிக்காக பெரும்பாலான விண்ணப்பங்கள் கிடைத்த போதிலும் குறிப்பிட்ட தொகையினரையே இணைத்துக் கொள்ள முடிந்தது.

கணவனை இழந்த இளம் விதவைப் பெண்கள் தையல் பயிற்சிகளில ஆர்வம் காட்டி வருகின்றனர். அத்துடன் பல இளைஞர், யுவதிகள் வேலையற்றும் வேலைக்கான தகுதிஉள்ளவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கென விசேட வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

வன்னியில் 10 ஆயிரம் பேருக்கு இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கவுள்ளோம். இதில் 6 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும் 4 ஆயிரம் வேலைவாய்ப்புகள் மறைமுகமாகவும் வழங்கப்படும்.

அத்துடன் வன்னியில் மூன்று ஆடைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும். அதற்காக முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது.

இளைஞர்கள் மீண்டுமொரு போராட்ட சிந்தனைக்குள் சென்று விடாத வகையில் அவர்களின் நலநோன்பு நடவடிக்கைகள் வேலை வாய்ப்புகள் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை, நாம் ஆரம்பித்துள்ளோம். இளைஞர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றுகின்றனர் என்று தெரிவித்தார். (6)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் இராமாயணம் காட்டும் விழுமியங்கள் என்னும் விடயம் பற்றி மூத்த ஊடகவியலாளரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான கலாபூஷணம் செல்லத்தம்பி மணிவாசகர் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

# இந்து ஆலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய ரீதியான திட்டமொன்று வகுக்கப்படவேண்டும்

## பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

இந்து ஆலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய ரீதியான திட்டமொன்று வகுக்கப்படவேண்டுமென பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் அமைந்துள்ள இந்து ஆலயங்களை அபிவிருத்தி செய்வது குறித்து விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்து கலாசார விவகார திணைக்கள அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

இதன்போது வடக்கு கிழக்கில் யுத்ததினால் அழிவடைந்த இந்து ஆலயங்களை மீளவும் புனர்நிர்மாணம் செய்வது குறித்து ஆராயப்பட்டுள்ளதாகவும் மேலும் இந்து ஆல யமொன்றை அபிவிருத்தி செய்வதற்காக தலா ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யு மாறு தமிழீழ அரசியல் கட்சி உறுப்பினர்கள் பிரதமரிடம் கோரியுள்ளதாகவும் தெரிகிறது.

இதேவேளை யுத்தத்தின் போது வடக்கு கிழக்கில் ஆயிரத்து 471 இந்து ஆலயங்கள் அழிவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சந்திப்பின் போது தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# வவுனியா வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகராக டாக்டர் சத்தியமூர்த்தி நியமனம்

(கொழும்பு)

வவுனியா வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக முன்னர் பணியாற்றிய டாக்டர் ரீ.சத்தியமூர்த்தி நேற்று முன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியாவில் பணியாற்றிய டாக்டர் பவானி பசுபதிராஜா யாழ் .போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக இடம் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளதையடுத்து அவரது இடத்திற்கு டாக்டர் சத்தியமூர்த்தி நியமிக்கப் பட்டுள்ளார்.

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே வன்னியில் கடும் சண்டைகள் நடைபெற்ற வேளை கிளிநொச்சியில் பணியாற்றிய டாக்டர் சத்தியமூர்த்தி தமது சக வைத்திய அதிகாரிகள் ஊழியர்களுடன் முள்ளிவாய்க்கால் வரை இடம்பெயர்ந்து சென்ற இடமெல்லாம் தமது மருத்துவ சேவையைத் தொடர்ந்தார் என்பதும் முள்ளிவாய்க்காலில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்த போது அவரும் அவருடன் இணைந்து பணியாற்றிய 3 மருத்துவர்களும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பது தெரிந்ததே. (6-4)

# 08.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1099-முதலாம் சிலுவைப் போர்: 15 ஆயிரம் கிறிஸ்தவ போர் வீரர்கள் பட்டினியுடன் ஜெருசலேம் அருகில் சமய ஊர்வலம் சென்றனர்.
- 1497-வாஸ்கொட காமாவின் இந்தியாவுக்கான முதல் நேரடிப் பயணம் தொடக்கம்.
- 1709-ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் போல்ட்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ள்ஸ் மன்னனைத் தோற்கடித்தான்.
- 1815-பதினெட்டாம் லூயி பாரிஸ் திரும்பி பிரான்சின் மன்னானான். இரு வாரங்களே பதவியில் இருந்த நான்கு வயது இரண்டாம் நெப்போலியன் பதவி இழந்தான்.
- 1859- சுவீடன்-நோர்வே மன்னனாக சுவீடனின் பதினைந்தாம் சார்ள்ஸ் முடி சூடினான்.
- 1889- வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் முதலாவது இதழ் வெளியானது.
- 1892- நியூபவுண்லாந்தின் சென் ஜோன்ஸ் நகரில் இடம்பெற்ற பெரும் தீ நகரில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.
- 1982- ஈராக் அதிபர் சதாம் உசேன் படுகொலை முயற்சியில் இருந்து தப்பினார்.
- 1985- திம்புப் பேச்சுவார்த்தைகள்: இலங்கை அரசுக்கும் ஈழ விடுதலை அமைப்புகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.
- 1990- ஜெர்மனி ஆர்ஜென்டீனாவை வென்று 1990 கால்பந்து உலகக் கிண்ணத்தை வென்றது.
- 2003-சூடான் விமானம் விபத்துக்குள்ளாகியதில் 117 பேர் கொல்லப் பட்டனர். இரண்டு வயது குழந்தை ஒன்று மட்டும் உயிர் தப்பியது.

## பிறப்புகள்

- 1895-ஈகர் தம் ரஷ்யா இயற்பியலாளர் நோபல் பரிசு பெற்றவர் (இ.1971)
- 1906-பிலிப் ஜோன்சன் , அமெரிக்கக் கட்டிடக் கலைஞர் (இ.2005)
- 1949-ராஜசேகர ரெட்டி ஆந்திர முதலமைச்சர் (இ.2009)
- 1972- சௌரவ் கங்குலி இந்தியத் துடுப்பாட்ட வீரர்.

## இறப்புகள்

- 1695-கிறிஸ்டியான் ஹைஜன்ஸ் டச்சு கணிதவியலாளர் (பி.1629)
- 1979-சின் - இட்டீரோ டொமனாகா நோபல் பரிசு பெற்றவர் (பி.1906)
- 1979- றொபேர்ட் வூட்வேர்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1917)
- 1994-கிம் இல்-சுங், வட கொரியத் தலைவர் (பி.1912)
- 2007-சந்திரசேகர் 11 ஆவது இந்தியப் பிரதமர் (பி.1927)

**1989-ஈழத்து நாடகத் துறையின் முன்னோடி நடிகமணி வி.வி.வைரமுத்து இதேநாளில் காலமானார். (பி.1924)**



# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:-எஸ்.எ.சந்திரபவன்

## மாதிரி பரீட்சை–10
## வினாத்தாள் –II

நேரம்- 1 மணி 15 நிமிடம்

01.

கோண கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சுன்னு
உதைச்சானய்யா சின்னத்துரை
(அ)

பொட்டுப்பொட்டா கையெழுத்தாம்
பொன் பதிச்ச பேனாவாம்
ஆதரிச்சு பேரு போடும்
ஐயா கணக்குப்பிள்ளை
(ஆ)

பாட்டுக்குப் பணிய லயம்
பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சுக்கு பீலிக் கரை
வாச்சுதடா உந்தனுக்கு
(இ)

திண்ணயத் திண்ணயக் கூட்டுங்களேன்
தெருவுத் திண்ணயக் கூட்டுங்களேன்
நம்மையா கங்காணி சாஞ்சிருக்க
சருகுத் திண்ணயக் கூட்டுங்களேன்
(ஈ)

1) இப்பாடல் இலங்கையின் எப்பிரதேசத்திற்குரியது? ( )
2) பாடலில் கூறப்பட்டுள்ள மலைநாட்டுப் பயிர் எது? ( )
3) லயம் என்பது அப்பிரதேசத்தில் எதனைக் குறித்து நிற்கின்றது? ( )
4) ஒரு பழம் என்பதன் எதிர்ப்பொருளை எழுதுக. ( )
5) 'வாச்சுதடா' எனும் பேச்சு மொழியின் செம்மையான மொழி நடையை எழுதுக. ( )
6) பந்தடிக்க - என்பதைப் பிரித்தெழுதுக. ( )
7) பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் நபர்கள் மூவரின் பெயர்கள் பாடலில் உள்ளன. அவற்றுள் ஒருவரின் பெயரை எழுதுக.( )
8) பாடலிலுள்ள அடுக்குத் தொடர் ஒன்றினை எழுதுக. ( )
9) மேலுள்ள பாடல்பகுதி எந்த வகைப் பாடலினுள் அடங்கும். ( )
10) 'திண்ணை' என்பது யாது? கருத்து விளக்கம் தருக. ( )

*(10 புள்ளிகள்)*

02. இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை எழுதுங்கள்.

1) யானையை மேய்ப்பவன் (................................) என அழைக்கப்படுவான்.

2) பசுவின் இளையது நாகு என்பது போல எருதின் இளையது (.........................) எனப்படும்.

*(2 புள்ளிகள்)*

03. கீழ்வரும் ஒவ்வொரு கருத்துக்குமுரிய பொருத்தமான பழமொழிகளை எழுதுக.

1) முயற்சி செய்தால் அதற்குரிய பயனை அடையலாம்.

.................................................................................................

2) இளமையிற் கற்கும் கல்வியே உறுதியானது.

.................................................................................................

*(2 புள்ளிகள்)*

04. முதலில் தரப்படும் சொல்லுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லின் கீழ் கோடிடுக.

1) அந்தரங்கம் i) பரகசியம் ii) இரகசியம் iii) அரங்கம்
2 சிம்மாசனம் i) கவியரங்கம் ii) அந்தப்புரம் iii) அரியாசனம்

*(2 புள்ளிகள்)*

05. கீழ்வரும் சுருக்க எழுத்துக்களின் விரிவான சொற்றொடரை எழுதுக.

1) தொ.பே.இல -
.................................................................................................
2) இ.மி.ச -
.................................................................................................

*(2 புள்ளிகள்)*

06. கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. நீண்டநாள் பாவனைக்குரிய உணவுப்பொருள் எது?
1) முட்டை
2) இறைச்சி
3) பழப்பாகு

2. இன்று நிலத்தையும் சூழலையும் மாசுபடுத்தும் பொருளாக மாறியுள்ள முக்கிய பாவனைப் பொருள் எது?
1) கைத்தொலைபேசி
2) பொலித்தீன்
3) இறப்பர்

3. எந்த அத்தியாவசிய தேவையைக் கருத்திற் கொண்டு, தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது?
1) கடிதப் பரிமாற்றம்
2) பொதிஅனுப்புதல்
3) தந்தி அனுப்புதல்

4. இலங்கை மக்கள் தமது குடி நீர்த்தேவையை நிவர்த்தி செய்வதற்கு அதிகளவில் பின்பற்றும் நீர் முறை யாது?
1) நீர்பாசனக்குழாய் நீர் மூலம்
2) கிணறுகள், குழாய்க் கிணறுகள் மூலம்
3) ஆறுகள், குளங்கள் மூலம்

5. தரைப்போக்குவரத்து ஊடகங்களில் மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் பயணிக்கக் கூடிய ஊர்தி எது?
1) தொடருந்து
2) பேருந்து
3) சிற்றூர்தி

6. கீழ்தரப்பட்டுள்ள கலத்தல் முறைகளில் கலப்படம் என்பதன் பொருளாக அமையாத விடை யாது?
1) பாலுடன் நீர் கலத்தல்
2) மிளகுடன் பப்பாசி விதை கலத்தல்
3) மிளகாய்ப் பொடியுடன் மல்லிப் பொடி கலத்தல்

7. குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பேணமுடியாத பழம் பின்வருவனற்றுள் எது?
1) வாழைப்பழம்
2) தக்காளிப்பழம்
3) அப்பிள்பழம்


8. பனம்பழச்சாற்றின் மூலம் தயாரிக்கப்படும் உணவுப்பொருள் எது?
1) கருப்பட்டி
2) புழுக்கொடியல்
3) பனாட்டு

9. இலங்கைவாழ் முஸ்லிம்களின் தாய்மொழி எது?
1) தமிழ்மொழி
2) சிங்களமொழி
3) அரபுமொழி

10. சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று இனப் பெண்களும் அணிந்து கொள்ளும் பொதுவான ஆடை யாகக் கருதக் கூடியது எது?
1) பஞ்சாபி
2) பாவாடை-சட்டை
3) சேலை

*(10 புள்ளிகள்)*

07. கீழே சில சேவைகள் தரப்பட்டுள்ளன. அவை எந்தெந்தச் சேவைகளின் கீழ் அடங்கும் என அறிந்து அச்சேவைகளின் பெயர்களையும் படத்தில், அம்புக்குறியினால் குறிக்கப்படும் நபர்களின் பெயர்களையும் எழுதுக.


A 
B 
C 

1. நபரின் பெயர் 1. (.........................) 1. (.........................)1. (.........................)

2. சேவையின் பெயர் 2. (...................) 2. (...................) 2. (...................)

*(6 புள்ளிகள்)*

08. கீழ்வரும் படங்களின் ஆங்கிலச் சொற்களையும் சிங்களச் சொற்களையும் ஒழுங்குமுறையில் எழுதுக

A 
B 
C 
D 

ஆங் - 1. (.........................) 2. (.........................)
சிங் 1. (.........................) 2(.........................)

ஆங் - 3. (.........................) 4(.........................)
சிங் - 3. (.........................) 4. (.........................) *(8 புள்ளிகள்)*

09. கீழே கூட்டினுள் சில காரணங்கள் தரப்பட்டுள்ளன. அதன் கீழ்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான காரணங்கள் ஆங்கில எழுத்துக்களை கூற்றுக்களின் எதிரே பொருத்தமாக எழுதுக.

காரணங்கள்

A. நுண்ணங்கிகள் அழிக்கப்படுகின்றமையால்.

B. நஞ்சாக மாறுவதற்கு சந்தர்ப்பம் அதிகம் உள்ளமையால்.

C. விற்றமின் முதலான போசணைச் சத்துக்கள் இழக்கப்படுகின்றமையால்.

D. உடலில் உள்ள நீர் வியர்வையாக வெளியேறுகின்றமையால்.

E. பற்றீரியா பங்கஸ் போன்றவற்றின் தாக்கத்தினால் ஆகும்.

கூற்றுகள்

1) உணவுப்பொருட்கள் பழுதடைகின்றன. ( )

2) பச்சையாக உண்ணும் உணவுகளை உப்புநீரில் கழுவிய பின்னரே உண்ணவேண்டும். ( )


3) சோறு சமைக்கும்போது மேலதிக நீர் வடிந்து வெளியேறுகிறது. ( )

4) இஞ்சியையும் மரவள்ளிக்கிழங்கையும் சமநேரத்தில் உணவாக உட்கொள்ளக் கூடாது. ( )

5) மழைக்காலங்களை விட வெயில் காலங்களில் தாகம் எடுப்பது மிகவும் அதிகமாகும். ( )

(5 புள்ளிகள்)

10. கீழே நான்கு நண்பர்களின் சுடுநீர் குடுவைகள் காணப்படுகின்றன. அவற்றிலுள்ள தேநீரின் அளவுகளைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1) பாபுவினதும் சோமுவினதும் தேநீரின் அளவுகளைக் கூட்டி எழுதுக. (.....................................)

2) ராமுவினது தேநீரிலிருந்து கோபுவினது தேநீரின் அளவைக் கழித்து எழுதுக. (.....................................)


3) சோமுவினது தேநீரின் அளவுபோல் மூன்று மடங்கு அளவு யாது? (.....................................)

4) பாபுவின் குடுவையிலுள்ள தேநீரின் அளவை நான்கு பேருக்குச் சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைக்கும் தேநீரின் அளவு யாது? (.....................................)

5) நான்கு குடுவைகளிலுமுள்ள தேநீரின் அளவினைக் கூட்டி எழுதுக. (.....................................)

(10 புள்ளிகள்)

11. கீழ் உள்ள A, B ஆகியவை இரு சதுரக் காணிகளாகும். அவற்றை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.




1. i) காணி A யில், D யிலிருந்து E வரையான நீளம் யாது? (.....................)

ii) காணி B யில்,E யிலிருந்து F வரையான நீளம் யாது? (.....................)

iii) காணி B யில், F யிலிருந்து G வரையான நீளம் யாது?(.....................)

iv) காணி B யில், I யிலிருந்து E வரையான நீளம் யாது? (.....................)

(4 புள்ளிகள்)

2. i) காணி A யினது சுற்றளவு யாது? (.....................................)

ii) காணி B யினது பரப்பளவு யாது? (.....................................)

iii) C யிலிருந்து I ஊடாக F இற்குச் சென்று , G யை அடைய எத்தனை மீற்றர் நடக்க வேண்டும்?


(.....................................)

iv) D யிலிருந்து F ஊடாக G யிற்கு செல்லும் தூரத்திற்கும், D யிலிருந்து C ஊடாக H இற்கு செல்லும் தூரத்திற்கும் இடையே எத்தனை மீற்றர் வித்தியாசம் உண்டு?

(.....................................)

(8 புள்ளிகள்)

12. கீழே இரண்டு ஆரம்ப விஞ்ஞானச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றின் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.





1. இப்படத்தில் கேத்தலில் நீர் நிரப்பப்பட்டு அடுப்பில் வைத்து சூடாக்கப்படுகின்றது.

i ) கேத்தலின் வாயினால் வெளியேறுவது யாது? (.........................)

ii ) B யில் யாது நிகழும்? (.....................................)

(4 புள்ளிகள்



2. மெழுகுதிரிச் சுவாலையில் கம்பியொன்று பிடிக்கப்படுகின்றது.

i) கம்பியில் நிகழும் மாற்றம் யாது?


.....................................

ii) இச்செயற்பாடு எதனைக் கண்டறிவதற்காகச் செய்யப்படுகின்றது?

.....................................

(4 புள்ளிகள்)

13. கழவரும படஙகளான பெயரகளைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.



i) .................... ii) .................... iii) .................... iv) ....................

(4 புள்ளிகள்)

14. கீழுள்ள வித்துக்களின் பெயர்களை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான வித்துக்களின் பெயர்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.

*கத்தாப்புக் கொட்டை / தாமரை / மரமுந்திரி / எருக்கலை/ குன்றிமணி / தக்காளி / பலா*

1) அவித்தும், பொரித்தும் உண்ணக்கூடிய வித்து எது? (.....................................)

2) மிளகாய் வித்தைப் போன்ற அமைப்பையுடைய இன்னொரு வித்து எது? (.....................................)

3) நிழற்தாவரம் ஒன்றின் வித்து எதுவாக இருக்கும்? (.....................................)

4) பழத்தின் வெளியே தள்ளிக் கொண்டிருக்கும் வித்து எது? (.....................................)

5) கறுத்த முகையுள்ள சிவப்பு வித்து எது? (.....................................)

6) நீரினால் பரவும் வித்து ஒன்று எது? (.....................................)

7) வெடித்துப் பரவும் வித்து ஒன்று எது ? (.....................................)

(7 புள்ளிகள்)

15.. நீர் தொலைக்காட்சியிலோ அல்லது நேரிலோ பார்த்து ரசித்த ஒரு நிகழ்ச்சி பற்றிய உமது உணர்வுகளை நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வாக்கியங்களில் எழுதுக. (நாடகம், நடனம் மற்றும் உம்மைக் கவர்ந்த ஏதாவது ஒரு நிகழ்ச்சி)

(12 புள்ளிகள்)

# ஜப்பானியக் காதற் பாடல்களின் மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும் (2)

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
முன்னாள் ஆய்வாளர், தக்சுயின் பல்கலைக்கழகம், டோக்கியோ, ஜப்பான்.



பாடல்களின் நடை, பொருள், உவமை என்பன ஒப்பீட்டடிப்படையில் எளிமையானவையாகக் காணப்படுகின்றன. அவற்றிலே தனித்துவமான கவித்துவ அழகு செறிந்துள்ளது. பாடல்களில் அக்கால மக்களின் நாட்டுப்புற வாழ்வு, உணர்வு நிலைகள், நம்பிக்கைகள், நடைமுறைகள் என்பவற்றையும் பற்றித் தெளிவாக அறியக் கூடியதாயுள்ளது. சிறப்பாக அவைக்களப் புலவர்களாலே கற்பனை பண்ணமுடியாத பல விடயங்கள் இச் சாதாரண புலவர்களாலே மிக எளிமையாகப் பாடல்களிலே கூறப்பட்டுள்ளன.

### 2.காதற் பாடல்களின் தொகுப்புநிலை

மன்யோசுப் பாடல்கள் முதலில் வாய்மொழிப் பாடல்களாகவெ நிலவின. பின்னர் சீன வரிவடிவத்திலே பிரதியாக்கம் பெற்றன. அதிலும் சீன மொழியினது உச்சரிப்பை மட்டுமே பாடல்களை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். சீனமொழிச் சொற்களின் பொருள் பயன்படுத்தப்படவில்லை. எனவே மன்யோசுப் பாடல்கள் எழுதப் பயன்பட்ட சீன வரி வடிவத்திற்கு 'மன் யோகந' (Manyo-Kana) எனச் சிறப்பான பெயரொன்று ஜப்பானியரால் வழங்கப்பட்டிருந்தது. மன்யோசுப் பாடல்கள் சீன வரிவடிவத்திலே எழுதப்பட்டிருப்பினும் சீன மொழி பேசுபவர்களால் விளங்கிக்கொள்ள முடியாத பாடல்களாக இருந்தன. பின்னர் மன்யோசுப் பாடல்கள் 'கிரகந'விலும் (Hira gana) எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. கி.பி.எட்டாம் நூற்றாண்டில் 'மன்யோகந' வில் மன்யோசுப் பாடல்கள் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டன. அவை 20 தொகுதிகளாக அமைந்தன. ஆனால் இப் பாடல்கள் யாவும் ஒரே காலத்தில் தொகுக்கப்பட்டன என்று கூறுவதற்கில்லை. வேறுபட்ட காலங்களிலே தொகுப்பு நடைபெற்றிருப்பதைத் தற்போது கிடைத்துள்ள தொகுப்புகள் மூலம் உணரமுடிகிறது. மன்யோசுப் பாடல்கள் தொகுப்பு முயற்சிகளில் 'யகமொச்சி' (Yakamochi) என்பவரின் தொகுப்பே சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

அவர் இயற்றிய பாடல்கள் 17ஆம், 18 ஆம், 19 ஆம் தொகுதிகளிலே இடம்பெற்றுள்ளன. மன்யோசு 20 ஆம் தொகுதிகளிலுள்ள கடைசிப் பாடலையும் இவரே இயற்றியுள்ளார். இப்பாடல் கி.பி 759 இல் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கால கட்டத்திலே யகமொச்சி ஜப்பானின் இநப என்னும் மாகாணத்தின் ஆளுநராகக் கடமை புரிந்துள்ளார். எனவே இக்காலகட்டத்தில் தான் மன்யோசுப் பாடல்களின் முழுத் தொகுப்பு முயற்சியும் நிறைவு பெற்றிருக்கவேண்டும்.

யகமொச்சி போன்ற பலர் மன்யோசுப் பாடல்களின் தொகுப் முயற்சிகளிலே ஈடுபட்டிருந்த போதும் தொகுப்புக்கென வரையறுக்கப்பட்ட நியதிகள் எவையும் இருந்ததாகத் தெரியவில்லை.

தொகுப்பாளர்களது நிலைகளுக்கு ஏற்பவே தொகுப்பு முறைகளும் வேறுபட்டமைந்துள்ளன. அதனால் தொகுப்புகளின் வகைப்பாட்டிற்கும் ஒழுங்குமுறைக்கும் ஒரு விதிமுறையைக் காணமுடியாதென ஜப்பானிய அறிஞர்கள் கருதுகின்றனர். மன்யோசுப் பாடல்களிலே முன்னைய ஜப்பானியத் தொகுப்பு நூல்களான கொஜிகி, நிஹொன்சொக்கி பற்றிய குறிப்புகளும் வந்துள்ளன. மேலும் தொகுப்பாளர்கள் பாடல் மூலாதாரம், உசாத்துணைகள் பற்றிய தமது கருத்துக்களையும் தொகுப்புகளிலே இணைத்துள்ளனர். மன்யோசுப் பாடல்கள் தொகுக்கப்பட்ட இடங்களும் சில சந்தர்ப்பங்களிலே தரப்பட்டுள்ளன.

மன்யோசுப் பாடல்கள் பயன்படுத்தப்பட்ட பாவடிவங்கள் 3 வகைப்படும். அவற்றுள் தங்க (Thaka) என்பது குறும்பாடல் வடிவமாகும். ஜப்பானியப் பாவடிவத்தின் சிறப்புப் பண்பாகத் திகழ்வது அதன் 5-7 அசைகள் கொண்ட அடியாகும். ஜப்பானிய இலக்கிய ஆரம்ப காலந் தொடக்கம் பெரும்பாலான ஜப்பானியப் பாடல்கள் 5-7, 5-7,7 என்னும் அசைகள் கொண்ட வடிவிலேயே அமைந்தன.

அதாவது பாடல் முழுவதும் 31 அசைகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு அடியும் 5-7 என 12 அசைகளைக் கொண்டிருக்கம். அவை 12 உயிரோசைகளாய் அமைந்திருக்கும். Thanka என்னும் வடிவத்தை வருமாறு காட்டலாம்.

..................... (5) .................(7)
..................... (5) .................(7)
.................................(7)

KOSO SAKISI (5) FISAKI IMA SAKU (7) சென்ற ஆண்டு அலர், பிசகி இப்போ அலர்ந்து

ITADURA NI (5) TUTI NI YA OTIMU (7) நலிவினிலே, வருந்தியே உதிரும்

MIRU FITO NASINI (7) காணும் மாந்தர் இன்றியே.

அடுத்து Choka என்னும் பாவடிவம் நீண்ட பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் வடிவத்தில் 5-7 அசை கொண்ட அடிகள் இரண்டிற்கு மேற்பட வந்து இறுதியில் 7 அசை கொண்ட அடியால் நிறைவு பெறும். மன்யோசுவில் மூன்றாவதாக அமையும் வடிவம் Sedoka என்பதாகும். இதன் அமைப்பு வருமாறு அமையும்.

FATA SUSU KI (5) FONI VA SAKI DENU (7) கொடிச் சுசுகி, கதிரின் மலராத

KOFI WO WAGA SURU (7) காதலே நானும் செய்வேன்

THMA KAGIRU (5) TADA FITO ME NOMI (7) மணியொலியின் ஒரு பார்வை மட்டுமே

MISI FITO YUWE NI படும் மகளின் மேலுமே.

மன்யோசுவில் பல பாப்புனைவு உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வாய்மொழிப் பாடல்களாக இருந்து பின்னர் எழுத்து வடிவம் பெற்றமையால் சில சிறப்பான புனைவுகள் இடம்பெற்றுள்ளன. பண்பாடு தொடர்பான ஒரு சொல்லையோ சொற்றொடரையோ மந்திரச் சொல் அல்லது சொற்றொடர் போலப் பயன்படுத்தும் தன்மை காணப்படுகிறது. பாடல்களிலே இடம்பெறும் உவமை, உருவக அலங்காரப் பண்புகளைக் குறிப்பதற்கு மரபுநிலையில் பயன்படும் தொடர் 'மகுர கொதொப' (Makura Kotoba) என அழைக்கப்பட்டது.

இதனைத் தமிழிலே நேர் மொழிபெயர்ப்புச் செய்யின் 'தலையணைச் சொற்றொடர்' என அமையும். இதனை விளக்க பின்வரும் பாடலைக் காட்டலாம்.


FUYU GOMORI (5) FARU SAKU FANO WO(7) பனி மறையும், வேலினில் அலர் மலர்

TAWORI MOTI (5) TITABI NO KAGIRI (7) பறித்து வைத்தே, ஆயிரம் செலவிடை

KOFI WATARU KAMO (7) காதல் கழியுங் கொலோ!

இப்பாடலில் FUYU GOMORI என்னும் தொடர் தலையணைச் சொற்றொடராகும். FARU என்னும் சொல்லுடன் அணையும்.

(தொடரும்)



சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்திற்கு வருகை தந்த ஆன்மீகப் பேரொளி தி.நரேந்திரன்ஜி பிரார்த்தனை மையத்தினரால் வரவேற்கப்படுவதையும் "வாழ்வியல் முறைகளுள் வெற்றிகரமான வழிமுறைகள்" பற்றிய ஆன்மீக உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# வடக்கு கிழக்கில் 3இலட்சம் கண்ணிவெடிகள் அகற்றம்

## இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இதுவரை சுமார் மூன்று இலட்சம் நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் உபயமெதவல தெரிவித்துள்ளார்.

சதுர கிலோமீற்றர் 1732 பரப்பில் மொத்தம் 2 இலட்சத்து 90 ஆயிரத்து 445 நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவித்ததோடு முல்லைத் தீவில் 16 ஆயிரத்து 749, கிளிநொச்சியில் 57ஆயிரத்து 710 ,மன்னாரில் 59 ஆயிரத்து 379 , யாழ்ப்பாணத்தில் 10ஆயிரத்து 408, வவுனியாவில் 30 ஆயிரத்து 905, மட்டக்களப்பில் 16 ஆயிரத்து 320, அனுராதபுரத்தில் ஆயிரத்து 873,பொலநறுவையில் 957, திருகோணமலையில் 4ஆயிரத்து 983 கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

இப் பணிக்காக 28 அதிகாரிகளுடன் ஆயிரத்து 203 படையினரையும் பயன்படுத்தியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.(6)

# காடையர்கள் சகிதம் ஐ.நா.அலுவலகம் முற்றுகை

## இன்னசிற்றிபிரஸ் விமர்சனம்

(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் சென்ற காடையர்களே கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளதாக ஐ.நாவின் ஊடக அமைப்பான இன்ன சிற்றி பிறஸ் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா அலுவலகத்தை முற்றுகையிட்டு பணியாளர்களை பணயக் கைதிகளாக பிடிக்கப் போவதாக ஆறு நாட்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்த அமைச்சர் தற்போது முற்றுகையை மேற்கொண்டுள்ளார்.

விமலின் எச்சரிக்கையை ஐ.நா.உயர் அதிகாரி அது ஒரு காந்தீய எச்சரிக்கை என தெரிவித்திருந்தார். ஆனால் அவர் காடையர்கள் சகிதம் ஐ.நா அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளார்.

இலங்கை அரசு தம்மிடம் மன்னிப்பு கேட்கலாம் என ஐ.நா தெரிவித்திருந்த நிலையில் இலங்கை அரசு வன்முறைகளை மேற்கொண்டுள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

08. S=0 ஒரு வட்டமும் U=0 ஒரு நேர்கோடும் ஆகும். $S+\lambda u=0$ எனும் சமன்பாட்டை விளக்குக. $S^1=0$ என்னும் ஒரு மாறும் வட்டமானது $x^2+y^2=4$ எனும் வட்டமும் x +y=1 எனும் கோடும் இடைவெட்டும் புள்ளிகளினூடு செல்கிறது. வட்டம் $S^1=0$ ஆனது $x^2+y^2-2x-1=0$ எனும் வட்டத்தை P,Q வில் வெட்டுகின்றது. நேர்கோடு PQ நிலைத்தவொரு புள்ளி யினூடாகச் செல்கிறது எனக் காட்டி இப்புள்ளியின் ஆள்கூறுகளைக் காண்க.

அத்தோடு, PQ வின் நடுப்புள்ளியானது $2x^2+2y^2-5x+y+3=0$ என்பதால் தரப்படும் வளையி மீது கிடக்கின்றதென நிறுவுக.

09. (a) $O<\theta<\pi$ இல், $4\cos\theta.\cos2\theta.\cos3\theta=1$ இன் தீர்வுகளை எழுதுக.

(b) $\cos\theta=\dfrac{2\cos\phi-1}{2-\cos\phi}$ எனின் $(O<\theta,\phi<\pi)$

$\tan\dfrac{\theta}{2}=\sqrt{3}\tan\dfrac{\phi}{2}$ எனக் காட்டுக.

இதிலிருந்து $\sin\phi=\dfrac{\sqrt{3}\sin\theta}{2+\cos\theta}$ எனக் காட்டுக.

(c) முக்கோணியொன்றிற்கான கோசைன் விதியைக் கூறுக. வழமையான குறிப்பீடுகளுடன் முக்கோணி இல்

(i) $b\cos C-c\cos B=\dfrac{b^2-c^2}{a}$

(ii) $b\cos B-c\cos C=\dfrac{(c^2-b^2)\cos A}{a}$ என நிறுவுக.

(iii) முக்கோணி ABC யில், BC யின் நடுப்புள்ளி D ஆகவும் $\angle DAL=90^0$ ஆகவும் இருப்பின் $\cos A.\cos C=\dfrac{2(c^2-a^2)}{3ca}$ எனக் காட்டுக.

## இணைந்த கணிதம் II 3 மணித்தியாலங்கள்

### ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (a) $A, B$ என்பன ஒரே நிலைக்குத்துக் கோட்டில் Aஇற்கு மேலேB உள்ளவாறு அமைந்த இரு புள்ளிகள், இங்கு AB=h ஆகும்.Bயிலிருந்து நிலைக்குத்தாக மேனோக்கி u $ms^{-1}$ வேகத்துடன் துணிக்கை P எறியப்பட்டது. P ஆனது அதியுயர் புள்ளியைஅடையும் கணத்தில் A இலிருந்து துணிக்கை Q, அதே வேகம் u $ms^{-1}$ உடன் P ஐ நோக்கி எறியப்பட்டது.

(i) P எறியப்பட்ட கணத்திலிருந்து P,Q என்பன ஒன்றையொன்று சந்திக்கும் நேரம் வரையிலான் இரு துணிக்கைகளினதும் வேக நேரவரைபுகளை ஒரே அச்சுகளில் வரைக.

(ii) இதிலிருந்தோ அல்லது வேறுவிதமாகவோ $Q$ வீசப்பட்டு $\dfrac{h}{u}+\dfrac{u}{2g}$ செக்கன்களின் பின்னர் அவை சந்திக்கும் எனக்காட்டுக.

(iii) சந்திக்கும் கணத்தில் அவற்றின் வேகங்களைக் காண்க.

(iv) $Q$ தொடர்பான P இன் வேக - நேர வரைபை இன்னொரு வரைபில் வரைக

(b) A,B எனுமிரு கப்பல்கள் முறையே 2u$ms^{-1}$, u$ms^{-1}$ எனும் கதிகளுடன் $\theta^0$, $90^0+\theta$ எனும் திசைகோள்களில் செல்கின்றன. மூன்றாவது கப்பல் C, சீரான கதி $Vms^{-1}$ உடன் ϕ திசைகோளில் செல்வதாகக் காணப்பட்டது. A இல் உள்ள அவதானி ஒருவருக்கு C ஆனது $135^0$ திசைகோளில் செல்வதாகவும், B யில் உள்ள அவதானி ஒருவருக்கு C ஆனது வடக்கு நோக்கிச் செல்வதாகவும் தோன்றியது எனின், C யின் வேகத்தைக் கருதி இரு வேக முக்கோணிகளையும் ஒரே வரிப்படத்தில் வரைக.

இதிலிருந்து

1) $\dfrac{u}{\sin\phi}=\dfrac{V}{\cos\theta}$

2) $2u(\sin\theta+\cos\theta)=V(\sin\phi+\cos\phi)$ என்பவற்றைப் பெறுக.

3) $\tan\phi$ ஐ $\tan\theta$ இன் சார்பில் பெறுக.

02. (a) ஆப்பு ஒன்றின் மையத்தினூடான நிலைக்குத்து குறுக்குவெட்டுமுகம் முக்கோணி $ABC$ ஆகும். இங்கு $AB=AC$ உம் $A$ $90^0$ உம் ஆகும். 3m திணிவுடைய இந்த ஆப்பு, அதன் முகம் $BC$ ஒப்பமான கிடைமேசையில் இருக்குமாறு வைக்கப்பட்டுள்ளது.ஆப்பின் உச்ச A யிலுள்ள ஒப்பமான இலேசான கப்பிமீது செல்லும் இலேசான நீளா இழையின் முனைக ளுக்கு இணைக்கப்பட்ட 2m, m திணிவுள்ள $P, Q$ எனும் துணிக்கைகள் ஆப்பின் சாய்முகங்கள் $AB, AC$ இல் வைக்கப்பட்டு இழை இறுக்கமாக இருக்க தொகுதி ஓய்விலிருந்து விடப்படுகின்றது. தொடரும் இயக்கத்தில்

(i) ஆப்பு, துணிக்கைகளின் ஆர்முடுகல்களைத் துணிவதற்குப் போதிய சமன்பாடுகளை எழுதுக.

(ii) ஆப்பின் ஆர்முடுகல் $\dfrac{g}{9}ms^{-2}$ எனக்காட்டி, மேசையால் ஆப்பின் மீது மறுதாக்கத்ததைக் காண்க.

(iii) துணிக்கைP, ஆப்பின் வழியே x தூரம் வழுக்கியுள்ள போது, ஆப்பு மேசை வழியே இயக்கிய தூரத்தைக் காண்க.

(b) மட்டமான தரையிலுள்ள ஒரு புள்ளி O விலிருந்து P , Q எனுமிரு துணிக்கைகள் ஒரே கதி U உடன், வெவ்வேறு ஏற்றக் கோணங் களில் ஒரே நேரத்தில் வீசப்பட்டு, ஒரே நிலைக்குத்துத் தளத்திலியங்கு கின்றன. O விலிருந்து கிடைத்தூரம் 2h இலும்,O வின் மட்டத்துக்கு மேலே h உயரத்திலும் உள்ள புள்ளி C யினூடு அவை செல்கின்றன. P யின் வீசற்கோணம் $tan^{-1}(2)$ஆகும்.

(i) வீசற்கதி $u$ ஐ g, h இன் உறுப்புகளில் காண்க.

(ii) Q வின் வீசற்கோணம் $\tan^{-1}\left(\dfrac{4}{3}\right)$ எனக் காட்டுக.

(iii) இரு துணிக்கைகளும் $C$ ஐ அடைவதற்கு எடுத்த நேரங்களின் வித்தியாசம் $\left(3-\sqrt{5}\right)\sqrt{\dfrac{2h}{3g}}$ எனக் காட்டுக.

03. (a) சம ஆரையும் Km,m திணிவுகளையும் உடைய இரு ஒப்பமான கோளங்கள் P, Q என்பன ஒப்பமான நிலைக்குத்துச் சுவருக்குச் செங்குத்தான ஒரே கிடைகோட்டில் வைக்கப்பட்டுள்ளன.சுவரிலிருந்து அவற்றின் தூரங்கள் முறையே 2a, a ஆகும். Q ஆனது சுவரினை நோக்கி u எனும் வேகத்துடன் அக்கோட்டின் வழியே வீசப்பட்டது. Q சுவரினை அடிக்கும் கணத்தில் P ஆனது Q வை நோக்கி அதே கோட்டின் வழியே வேகம் u உடன் வீசப்படுகின்றது.
பந்துகள் சுவர் என்பவற்றுக்கிடையேயான மீளமைக்குணகம் 1/2ஆகும்.
(i) $P$ வீசப்பட்டு எவ்வளவு நேரத்தின்பின் $Q$ வை போதும்?
(ii)சுவரிலிருந்து P, $Q$ மோதும் புள்ளியின் தூரம் என்பவற்றைக்காண்க.

(iii)மோதுகையின் பின் $Q$ வின் இயக்கதிசை புறமாற்றப்படின் $k>\dfrac{2}{7}$ எனக்காட்டுக.

(b) O வை மையமாகவும் ஆரை a உம் கொண்ட ஒப்பமான வட்டவடிவ ஒடுங்கிய குழாய் ஒன்று நிலைக்குத்துத் தளத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. $m$ திணிவுள்ள துணிக்கை P உம் திணிவுள்ள $3m$ திணிவுள்ள துணிக்கை $Q$ உம் $\pi\, a/2$ நீளமுள்ள இலேசான இழையால் இணைக்கப்பட்டு இழை இறுக்கமாக இருக்க குழாயினுள் P ஆனது அதியுயர் புள்ளியிலும்$Q$ ஆனது O வின் மட்டத்திலுமிருக்க வைக்கப்பட்டுள்ளன. தொகுதி ஓய்விலிருந்து விடப்பட்டு நேரம் t இல் OP ஆனது $Q$ கோணம் வினூடு திரும்பியுள்ள போது இழை இறுக்கமாக உள்ள வரை $2a\left(\dfrac{d\theta}{dt}\right)^2=g\left(1-\cos\theta+3\sin\theta\right)$ ஆல் தரப்படுமெனக் காட்டுக. $P$ இற்கும் குழாய்க்குமிடையேயான மறுதாக்கத்தைக் காண்க. மேலும் இழையில் இழுவை $\dfrac{3mg}{4}(\cos\theta-\sin\theta)$ எனக் காட்டுக.

04. (a) 1200Kg திணிவுடைய கார் ஒன்று $\sin^{-1}\left(\dfrac{1}{15}\right)$ சாய்வில் மேனோக்கி20$ms^{1}$ மாறாக்கதியில் செல்கிறது. எஞ்சின் வேலை செய்யும் வலு25$kw$ எனின் இயக்கத்துக்கான தடைவிசையைக் காண்கசாய்வின் உச்சியை அடைந்தும் பாதை கிடையாக அமைகின்றது. கிடையான பாதையில் தடைவிசை மாற வில்லை எனக் கொண்டு தொடக்க ஆர்முடுகலைக் காண்க. (g9.8$ms^{-2}$)

(b) துணிக்கை ஒன்று மீள்தன்மை இழைமூலம் நிலையான புள்ளி A யிலிருந்து புவியீர்ப்பின் கீழ் தொங்குகின்றது. சமநிலையில் இழையின் நீட்சி c ஆகும். சமநிலைத்தானத்தின் கீழ் 3c தூரத்திற்கு துணிக்கை இழுக்கப்பட்டு நேரம் t=0இல் ஓய்விலிருந்து விடுவிக்கப்படுகிறது. சக்திக்காப்பு விதியைப் பயன்படுத்தி இழையின் நீளம் $(l+x)$ ஆக இருக்கையில் வேகம் $x^{\cdot 2}$ ஐப் பெற்று ஆர்முடுகல் x இற்கு g,c.x என்பவற்றில் கோவையொன்றைப் பெறுக. இங்கு $l$ இழையின் இயற்கை நீளம் ஆகும். நீர் பெற்ற வகையீட்டுச் சமன்பாட்டிற்கான தீர்வு.

$$x=c+A\cos\omega t+B\sin\omega t \quad (\text{இங்கு } \omega^2=\frac{g}{c})$$

என எடுத்து மாறிலிகள் A, B ஐக் காண்க இதிலிருந்து
(i) இழை தொய்ய எடுத்த நேரத்தைக் காண்க.
(ii) இழை தொய்யும் போது துணிக்கையின் கதியைக் காண்க.
(iii) துணிக்கை கணநிலை ஓய்வுக்கு முதலில் வர எடுத்தமொத்த நேரத்தைக் காண்க.

05. (a) செவ்வகம் $ABCD$ யில் $AB=2a$, $BC=a$, $AB$ யின் நடுப்புள்ளி E ஆகும். $2P, P, Q, PN$ விசைகள் முறையே $AB, EC, ED, DA$ வழியே தாக்குகின்றன.

(i) இவ்விசைகளின் விளையுள் AD யிற்கு சமாந்தரமான தனிவிசை $Q$ :P=2 $\sqrt{2}$+1:1 ஏனின் எனக் காட்டுக.

(ii) விளையுள் C யிற்கூடாகத் தாக்கும் தனிவிசை எனின் $Q=2\sqrt{2}P$ எனக்காட்டி விளையுளின் பருமனைக் காண்க.

(iii) $Q=P\sqrt{2}$ எனின் விளையுளின் பருமனைக் கண்டு, விளையுளின் தாக்கத்தோடு ABயுடன் அமைக்கும் கோணம் $\tan^{-1}\left(\sqrt{2}-1\right)$ எனக் காட்டுக.

(b) ஆரை a உம் முறையே $3w$, $2w$ நிறைகளும் உடைய இரு சீரான ஒப்பமான கோளங்கள் $A, B$ ஒவ்வொன்றும் a நீளமுள்ள இரு இலேசான நீளா இழைகளினால் ஒரு புள்ளி O விலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளன. அவை ஒன்றையொன்று தொட்ட வண்ணம் A சமநிலையிலுள்ளன.

(i) கோளம் உடன் இணைக்கப்பட்ட இழை நிலைக்குத்துடன் $\tan^{-1}\left(\dfrac{\sqrt{3}}{4}\right)$ இல் சாய்ந்துள்ளது எனக்காட்டுக.

(ii) இழைகள் ஒவ்வொன்றிலுமுள்ள இழுவைகளைக் காண்க.

# இடம்பெயர்ந்தவர்களில் ஒரு தொகுதியினர் இன்று முல்லைத்தீவில் மீள் குடியேற்றம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மேலும் ஒரு தொகுதி மக்கள் இன்று மீள் குடியேற்றப்படவுள்ளனர். 371 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 83 பேர் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அளம்பில் வடக்கு -தெற்கு மற்றும் செம்மலை ஆகிய இடங்களுக்கே மீள் குடியேற்றத்திற்காக மக்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இன்றைய தினம் தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்கான ஆயத்தங்களுடன இவர்களைக் காலை 8மணிக்கு நகர சபை மைதானத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# புதிய அரசியல் கட்சியாக பதிவதற்கு 83 கட்சிகள் விண்ணப்பம்

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சிகளாக பதிவு செய்வதற்காக 83 கட்சிகள் விண்ணப்பங்களை தேர்தல் திணைக்களத்திற்கு முன் வைத்திருப்பதாக திணைக்களத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ. பி. சுமணசிறி தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்காக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவால் கடந்த யூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதற்கமையவே 83 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி. சுமணசிறி தெரிவித்துள்ளதாவது விண்ணப்பங்களை ஆராய்ந்து எதிர்வரும் நாட்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

புதிய அரசியல் கட்சிகளை ஏற்றுக்கொள்ளவதற்கு அக்கட்சியின் நிர்வாகக் குழுவில் ஒரு பெண் அதிகாரியேனும் உள்ளடங்கியிருக்க வேண்டுமென்பது தேர்தல்கள் திணைக்களத்தின் ஒரு நிபந்தனையாகும்.

தேர்தல்கள் ஆணையாளர் தற்போது வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பியதும் விண்ணப்பங்கள் தொடர்பில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு கட்சிகளின் பதிவுக்கான அனுமதி வழங்கப்படும்.

இதுவரையில் தேர்தல்கள் திணைக்களத்தில் 66 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை,கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான ஜெனரல் சரத்பொன்சேகாவும் கடந்த யூன் மாதம் 30 ஆம் திகதி புதிய அரசியல் கட்சி ஒன்றை பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை கையளித்துள்ளார். (6)

# அரச ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வு அடுத்த வருடம்

## பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கு அமைவாக அரச ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட 2500 ரூபா சம்பள உயர்வு 2011 ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படும் என்று பிரதி நிதி திட்டமிடல் அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

இதற்கென வருடமொன்றுக்கு 36 ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒதுக்கப்பட்ட வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, ஐக்கிய தேசியகட்சி எம்.பி. யான தயாசிறி ஜயசேகர கேள்வியெழுப்பினார்.

இதன்போது 2010 மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கு அமைய அரச ஊழியர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட 2500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமா? அது எப்போது வழங்கப்படும்? அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே பிரதிநிதி திட்டமிடல் அமைச்சர் கஜதீர மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டவாறு 2500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும்.

தற்போது இலங்கை யிலுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை 1.2 மில்லியன் ஆகும். இவர்களுக்கான ஒரு வருடத்துக்கான அதிகரிக்கப்பட்ட சம்பளத் தொகையின் மதிப்பீடு ரூ.36 ஆயிரம் மில்லியன் ஆகும் என்றார். (6)

# மாலைதீவு பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க தயார்

## இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

மாலை தீவில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாலைதீவில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினருக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அந்நாட்டு அரசியலில் இஸ்திரமற்ற நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவு பிரச்சினைக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் இலங்கை வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அந்நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மாலைதீவு ஜனாதிபதி முஹமட் நசீடுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரச்சினையை சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கு சகல வழிகளிலும் இலங்கை ஒத்துழைப்பு வழங்கும் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட் டுள்ளது.

குறிப்பாக சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (6)

# நடிகை அசினின் படங்களுக்கு தமிழ் நாட்டில் தடை விதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் ரெடி திரைப்படப் படப்பிடிப்பில் கலந்துகொண்ட தென்னிந்திய முன்னணி நடிகை அசினின் படங்களுக்கு தென்னிந்திய திரையுலக நடிகர் சங்கத்தினர் தமிழ் நாட்டில் தடை விதித்துள்ளனர் என இன்போசிரா செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நடிகை அசினின் செயற்பாடு இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளை உதாசீனப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இலங்கைத் தமிழர்கள் துன்பங்கள் அனுபவித்து வருவதையிட்டு இலங்கையில் நடைபெறும் கலை கலாசார நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளப் போவதில்லை என்பதில் தென்னிந்திய திரையுலக நடிகர் சங்கத்தினர் உறுதியாக இருந்து வருகின்றனர். ஏற்கனவே கடந்த மாதம் நடைபெற்ற ஐபா விருது வழங்கல் விழாவை இவர்கள் பகிஷ்கரித்து இருந்தனர்.

இதனையடுத்து முன்னணி நடிகர் ,நடிகைகளான அமிதாப்பச்சன்,சாருக்கான், நமிதா ,ஜெனிலியா போன்றோர் ஐபா நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை. இதே வேளை கடும் பகிஸ்கரிப்புகளின் மத்தியிலும்



சல்மான்கான் ,விவேக் ஒபரோய்,சயிப் அலி கான்,ஹுர்த்திக்ரோசன் மற்றும் லாரா தத்தா ஆகிய நடிகர் நடிகைகள் ஐபா நிகழ்வில் கலந்துகொண்டனர்.இதன் எதிரொலியாக இவர்களின் திரைப்படங்களும் சர்ச்சைக் குள்ளாகியுள்ளது. மேற்படி திரைப்படத்தின் படப்பிடிப்பு மொரிஷியஸ் நாட்டிலேயே இடம்பெறவிருந்தது. எனினும் இதனை சல்மான்காண் இலங்கைக்கு மாற்றியுள்ளார். ரெடி படத்திற்கான படப்பிடிப்பு ஏற்பாட்டின்படி தெரிவு செய்யப்பட்ட இடத்தில் தனது கடமையை கட்சிதமாக நிறைவேற்றியுள்ளதாக அசின் எண்ணியுள்ளார்.

இருப்பினும் சர்ச்சைக்கு ஆளாக்கப்பட்டுள்ள நடிகை அசின் அவரது படங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்பிலான பிரச்சினையை உறுதியாகக்கொண்டு நிற்கின்றார். தற்போது கொலிவூட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ள அசினின் படங்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடை அவரது தொழிலைப் பாதிக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (6)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கணேஸ்வரம் அருள் மிகு குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறமும்,24ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 .30 மணிக்கு தேர்த்திருவிழாவும் , மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது (6-4)

# வயிற்றிலிருக்கும் சிசுக்களையும் கடனாளியாக மாற்றியுள்ளது அரசின் வரவு செலவுத்திட்டம்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் 2010 ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பிறந்த குழந்தைகள் மட்டுமன்றி வயிற்றில் இருக்கும் சிசுக்களை யும் கடனாளியாக மாற்றியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.


அரசாங்கம் இம்முறை சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தை ஓர் சட்ட ரீதியான ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளதோடு 2010 ஆம் ஆண்டுக்காக அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டதாகவும் திட்டமிட்ட முறையில் நாடாளுமன்றத்தை பிரதி நிதியமைச்சர் பிழையான வழியில் இட்டுச் சென்றதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த வரவு செலவுத் திட்டம் பிறந்த குழந்தை மட்டுமன்றி பிறக்கவிருக்கும் குழந்தைகளையும் கடனாளியாக மாற்றியுள்ளதென அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக் கப்படவுள்ள 2011 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திலும் மக்கள் மீது அரசாங்கம் சுமைகளை திணிக்கும் எனவும் அவர் எதிர்வு கூறியுள்ளதோடு கடந்த தேர்தல்களின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை புறந்தள்ளி அரசாங்கம் இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளதென லக்பிம பத்திரிகைக்கு அளித்த விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார். (6)



துன்னாலை வடக்கு அல்லையம்பதி முன்பள்ளி விளையாட்டுப்போட்டி நிகழ்வில் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வை படத்தில் காணலாம்.



யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் வழிகாட்டலில் முறைசாராக் கல்விப் பிரிவினரால் "பெற்றோர்களுக்கான கல்வி விழிப்புணர்ச்சிச் செயற்திட்டம் யா/ஆனைக்கோட்டை மெ.மி.த.க.வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் இ.புஸ்பரட்ணம், முறைசாராக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராசநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு மூன்றாவது முறையாக சபாநாயகர் எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதம் ஆரம்பித்து ஐந்து நாட்கள் வரையிலான காலப்பகுதியில் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மூன்றாவது முறையாக நேற்று முன்தினம் எச்சரித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நேற்று 2 ஆம் நாளாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கல்வி அமைச்சு உட்பட்ட பல அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் 2 ஆம் வாசிப்புக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றபோது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நோக்கி போத்தல் ஒன்று எறியப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றில் காரசாரமான கருத்து மோதல்கள் இடம் பெற்றன.

பிரதி அமைச்சர் சரத் குணரத்ன சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் மீது போத்தலை எறிந்த சம்பவம் தொடர்பில் தமது பெயர் செய்தித் தாள்களில் வெளியாகி இருந்தமை தமது சிறப்புரிமையைப் பாதிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்துரைத்த ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் மீது போத்தலை எறிந்தவர் பிரதி அமைச்சர் சரத் குணவர்தன என குறிப்பிட்டார். இதனை தமது கட்சி உறுப்பினர்கள் பலரும் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே இதற்கு எதிராக நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதில் வழங்கிய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இந்த முறைப்பாடு தொடர்பில் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதேவேளை குழு நிலை விவாதங்களில் கல்வி உயர்கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார துறைகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் விவாதங்கள் இடம் பெற்றன.

இதற்கிடையில் கடந்த திங்கட்கிழமை இரவு நேர நாடாளுமன்ற விவாதத்தின் போது, கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தம்மை கொலை செய்வதாக பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தையும் தம் மீது போத்தலால் தாக்குதல் நடத்தப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

தம்மை கொலை செய்யவேண்டுமானால் தமக்கு தெரியப்படுத்திவிட்டு அதனை மேற்கொள்ளுமாறு அவர் சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை நேற்று பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரித்த சம்பவம் ஒன்று சபையில் இடம் பெற்றது.

ஐக்கியதேசியக்கட்சியினர்எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்க மறுத்தமையை அடுத்தே சபாநாயகர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். எனினும் மேர்வின் சில்வா இறுதி வரை தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்க வில்லை.

வரவு செலவுத்திட்ட விவாதம் ஆரம்பித்து ஐந்து நாட்கள் வரையிலான காலப்பகுதியில் மேர்வின் சில்வாவை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மூன்றாவது முறையாக நேற்று எச்சரித்துள்ளார். (6)

# ஆட்குறைப்பு செய்கிறது மைக்ரோசொப்ட் நிறுவனம்

(கொழும்பு)

உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது நிறுவனத்தின் ஊழியர்கள் சிலரை பணி நீக்கம் செய்ய உத்தேசித்துள்ளது. கடந்த வருடத்திலும் சுமார் 5 ஆயிரம் ஊழியர்களை இந் நிறுவனம் பணி நீக்கம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

உலகின் பல பாகங்களிலும் தனது கிளையினை விஸ்தரித்திருக்கும் மைக்ரோசொப்ட் நிறுவனம் உலக பொருளாதார வீழ்ச்சிக்கு முகம் கொடுக்க முடியாமல் இந்தப் பணிநீக்க நடவடிக்கையை மேற்கொள்ள வுள்ளதாக அந்நிறுவனத்தை மேற்கோள் காட்டி செய்திகள் வெளி வந்திருக்கின்றன. (6)

# ஐ.நா.அலுவலகம் வழமைபோல் இயங்குமென அரசு எதிர்பார்ப்பு

## அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐ.நா.அலுவலகம் வழமைபோல் தொடர்ந்தும் செயற்படும் என இலங்கை அரசு எதிர்பார்ப்பதாகவும் ஐ.நா. அலுவலக ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் பொலிஸ் அதிகாரிகள் கூடிய விழிப்போடு செயற்படுவதாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

கொழும்பில் நேற்று முன்தினம் ஐ.நா. அலுவலகத்தில் முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை இலங்கை அரசாங்கம் உள்நாட்டு சர்வதேச கடப்பாடுகளுக்கமைய கையாண்டதாகவும் நேற்று முன்தினம் ஐ.நா. ஊழியர்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு ஏற்றவகையில் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (6-4)

# தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு


(கொழும்பு)

புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பிரச்சினைகள் குறித்து புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.யூ.குணசேகர ஆராயவுள்ளார்.

இதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள அமைச்சர் மற்றும் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளோரின் பெற்றோர் மற்றும் உறவினர்களையும் சந்திக்கவுள்ளனர். (6)

# வானில் ஓர் அதிசயம்



இந்த நூற்றாண்டின் இதுவரை நடந்தி ராத ஒரு வானிலை அதிசயம் இன்று இரவு நடக்கவுள்ளது.

டெல்டா ஒபிஹீயூச்சி என்ற நட்சத்திரத்தை ரோமா என்ற 50கி.மீ. விட்டம் கொண்ட ஒரு எரிகல் நடக்கவுள்ளதை பூமியில் இருந்து பார்க்க முடியும் .அப்போது நட்சத்திரத்தை அந்த எரிகல் மறைக்கவுள்ளதால் நட்சத்திர கிரகணம் ஏற்படவுள்ளது.

இந்த நூற்றாண்டில் இதுவரை பூமியில் இருந்து பார்க்கும் வகையிலான நட்சத்திரக் கிரகணம் நடந்ததே இல்லை என்பது குறிப் பிடத்தக்கது.

நள்ளிரவில் சில நொடிகளே நீடிக்கப் போகும் இந்த வானியல் சம்பவத்தை மத்திய ஐரோப்பா ,ஸ்பெயின் , கனாரி தீவுகள் உள் ளிட்ட பூமியின் சில பகுதிகளில் இருப்பவர்கள் மட்டும் இன்று இரவு காண முடியும்.

எரிகற்கள் மிக பயங்கரவேகத்தில் பய ணிப்பவை என்பதால் இந்த நிகழ்வு 5நொடி கள் மட்டுமே நீடிக்கும் என்பது குறிப்பித் தக்கது. (6)

# தேசிய டெங்கு ஒழிப்பு தினம் பிரகடனம்

(கொழும்பு)

தேசிய டெங்கு ஒழிப்பு தினங்களாக ஆகஸ்ட் மாதத்தின் நான்கு நாட்களை டெங்கு ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆகஸ்ட் மாதத்தின் முதல் வாரத்தினதும் இரண்டாம் வாரத்தினதும் திங்கட்கிழமையும் மூன்றாம் நான்காம் வாரங்களின் சனிக்கிழமையும் இவ்வாறு டெங்கு ஒழிப்பு தேசிய தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்புக்கான பணிகளை தேசிய மட்டத்திலும் மாகாண உள்ளூராட்சி மன்ற மட்டத்திலும் பரந்துபட்ட அடிப்படையில் மேற்கொள்ளுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார். (6)

# மாலிகா கந்தையில் தப்பிச்சென்ற கைதிகள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

மாலிகா கந்த நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து தப்பிச் சென்ற 11 கைதிகளில் இது வரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

சிறைச்சாலை திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் வெலிமடைப்பகுதியில் 6ஆவது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக குறிப்பிட்டார்.

மீண்டும் கைது செய்யப்பட்ட கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் தலைமறைவாகியுள்ள ஏனைய கைதிகளையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6)

## காதலர்களை சேர்த்து வைக்கும் மரம்

(தூத்துக்குடி)

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி யூனிய னுக்கு உட்பட்ட குலசேகரன் பட்டினத்தில் கடற் கரைக்குச் செல்லும் வழியில் பப்பரபள்ளி மரம் உள்ளது. இந்த மரம் இலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

இம் மரமானது சுமார் 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும். கோடை காலத்தில் பட்டுப்போன மரம் போலக் காட்சியளித்து மழைகாலத்தில் பச்சை இலையுடன் குளிர்ச் சியாகக் காட்சி தருவதைக் காணலாம்.

இந்த மரத்தின் மீது ஏராளமான இளஞ் ஜோடிகள் நம்பிக்கை வைத்து காதலர் மரம் என்று அழைக்கின்றனர்.

காதலிப்பவர்கள் காதல் நிறைவேறாமல் இருப்பவர்கள் தங்களது பெயர்களை, இந்த மரத்தில் எழுதி வைத்தால் காதல் விரைவில் நிறைவேறிவிடும் என்ற ஒரு நம்பிக்கை உள்ளது.

சிலர் ஜோடிகளின் பெயர்களை செதுக்கி வைத்து உள்ளனர். சிலர் அழியாத மையினால் எழுதி வைத்துள்ளனர். மொத் தத்தில் மரம் முழுவதும் 1000க்கும் மேற் பட்ட ஜோடிகளின் பெயர்களாக நிறைந்துள் ளது. (6)

## இராணுவ தளபாட தயாரிப்பில் இந்தியா முன்னணி வகிக்கும்



(பெங்களூர்)

2012 ஆம் ஆண்டுக்குள் இராணுவத் தளபாடம் தயாரிப்பில் உலகளவில் இந்தியா முன்னணி நாடாகும் என்று இந்திய இரா ணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித் தார்.

கப்பற் படைக்காக உருவாக்கப்பட்ட 'நாவல் டிரைனர் & என்.பி. 1' லகு ரக போர் விமானத்தை நேற்று முன்தினம் பெங் களூரில் அறிமுகம்செய்து வைத்து அவர் பேசியதாவது,

இந்த விமானத்தை உருவாக்க 7 ஆண்டுகளுக்கு முன் கப்பற்படை சார்பில் பணி தொடக்கப்பட்டது. அப்போது இந்த முயற்சி வெற்றி பெறுமா என எல்லோருக்கும் சந்தேகம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், அப் பணி இப்போது வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 3 மாதங்களாக பாதுகாப்புத் துறையில் வியத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது மிகவும் உணர்ச்சி பூர்வ மான தருணம் என்றாலும் இந்தியாவின் முதல் என்.பி. 1 போர் விமானத்தை அடுத்த மூன்று நான்கு மாதங்களில் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும்.

2012 ஆம் ஆண்டுக்குள் இந்தியா உலகிலேயே இராணுவ தளபாடங்களை தயாரிப்பதில் முதன்மை மையமாகத் திகழும் என்பது உறுதி இவ்வாறு அவர் தெரிவித் தார். (6)

## பாரதச் செய்திகள்

### தவறுதலாக பாய்ந்த குண்டு
### தென்மண்டல கடற்படை தளபதி பலி

கொச்சியில் கடற்படையினர் நேற்று பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, தவறுதலாக குண்டுபாய்ந்து தென்மண்டலகடற்படை தளபதி எஸ்.எஸ்.ஜாம்வால் மரணமடைந்தார்.

கேரள மாநிலம் கொச்சியில் ஐ.என்.எஸ். துரோனாச்சாரியா என்ற பெயரில் தென் மண்டல கடற்படைத்தளம் இயங்கி வருகிறது. இங்கு கடற்படையினர் பயிற்சியில் ஈடுபடு வது வழக்கம்.

இந்நிலையில், வழக்கம்போல் நேற்று காலையிலும் பயிற்சி நடைபெற்றது. அதனை தென்மண்டல கடற்படைத்தளபதி ரியர் அட் மிரல் எஸ்.எஸ்.ஜாம்வால் தலைமையேற்று நடத்தினார்.

அப்போது காலை 10.30 மணி அளவில் கடற்படையினர் வெடித்த குண்டு தவறுத லாக எஸ்.எஸ். ஜாம்வால் மீது பாய்ந்தது. இதில், ஜாம்வால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடற்படை வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த ஜாம்வால், கடற்படையில் மூன்றாவது பெரிய அதிகாரி யாவார். (6)

## மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை ஒடுக்க இராணுவம் பயன்படுத்தப்படமாட்டாது

### மத்திய உள்துறை செயலர் தெரிவிப்பு

(ராய்பூர்)

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் இராணுவத்தை பயன்படுத்தமாட்டேன் என்று இந்திய மத்திய உள்துறை செயலாளர் ஜி.கே.பிள்ளை தெரிவித்தார்.

மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அட்டகாசம் செய்து வருகின்றனர். குறிப்பாக ஜார்கண்ட், சட்டீஸ்கர், ஒரிசா, மேற்கு வங்கம், மகாராஷ்டிரா, ஆந்திரா, பீகார் ஆகிய 7 மாநிலங்களில் இவர்களின் வன்முறை அதிகமாக நடக்கிறது.

இவர்களை ஒடுக்க மாநில அரசுகளுடன் சேர்ந்து மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக் கத் தொடங்கி உள்ளது. இதனால், தீவிரவாதி கள் வன்முறை கட்டவிழ்த்துவிட்டு ஏராளமான மத்திய ரிசர்வ் பொலிஸாரைக் கொன்று குவித்து வருகின்றனர்.

இதனால், தீவிரவாத ஒழிப்பில் இராணு வத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இதுகுறித்து கடந்த மாதம் பாதுகாப்புக் கான மத்திய அமைச்சரவை குழுக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

அப்போது, பாதுகாப்பு துறை அமைச்சர் அந்தோனி எதிர்ப்புத் தெரிவித்ததுடன் எதிரி நாடுகளிடம் இருந்து நாட்டைக் காப்பதுதான் இராணுவத்தின் பணி என்றும் உள்நாட்டுப் பணியில் அவர்களை ஈடுபடுத்தக்கூடாது என்றும் கூறினார். ஒருமித்த கருத்து ஏற்படாத தால் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை என்று மத்திய அரசு சார்பில் கூறப் பட்டது.

இந்த நிலையில், மத்திய உள்துறை செயலாளர் ஜி.கே.பிள்ளை நிருபர்களிடம் கூறுகையில்,

தீவிரவாத வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவத்தை குவிக்க தற் போது அவசியமில்லை என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.அந்தப் பகுதிகளில் உள்ள நிலைமையைப் புரிந்து கொள்ளவும், உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அந்தப் பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு திட்டம் வகுக்கப்படும் என்றும் கூறினார்.


இதேவேளை தீவிரவாத வன்முறையால் பாதிக்கப்பட்ட 7 மாநிலங்களின் முதல்வர்கள் இம் மாதம் கூட்டத்தை பிரதமர் மன்மோகன் சிங் நடத்தவுள்ளார்.

டெல்லியில் 14ஆம் திகதி இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் ,ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், பீகார், மேற்கு வங்கம் ,ஆந்திரா,மகாராஷ்டிரா ,ஒரிசா ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் கலந்து கொள்கின்றனர்.

இதில், தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை களை தீவிரப்படுத்துவது, பழங்குடியினர் நலத் திட்டங்களை அமுல்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (6)

## காஷ்மீரில் மீண்டும் கலவரம் ; மூவர் பலி; 70 பேர் காயம்



(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் சில நாட்களாக ஓய்ந்திருந்த வன்முறை நேற்று முன்தினம் மீண்டும் வெடித்தது. ஸ்ரீ நகரில் ஏற்பட்ட கலவரத்தை அடக்க பொலிஸார் சுட்டதில் பெண் உட்பட 3 பேர் பலியாகினர்.

மோதல் சம்பவங்களில் 70 பேர் காய மடைந்தனர். ஸ்ரீநகரில் ஊர டங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் சுட்டதில் 2 இளைஞர்கள் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த வாரம் வன்முறை ஏற்பட்டது. இதில் 3பேர் இறந்தனர். இதைத் தொடர்ந்து கூடுதல் படைகள் குவிக்கப்பட்டு நிலைமை சீரடைந்து வந்ததால் கடந்த சில நாட்களாக அமைதி நிலவியது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை இரவு ஸ்ரீநகரில் பொலிஸார் மீது வன் முறைக் கும்பல் கல் வீசி தாக்கியது. அவர்களை பொலிஸார் விரட்டிச் சென்ற போது பெரிய கழிவு வாய்க்காலில் விழுந்து ஒருவர் இறந்தார்.

ஆங்காங்கே, ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது கல்வீச்சில் ஈடுபட்டனர். கோஜிபாக் என்ற இடத்தில் அரசு வான் ஒன்றை தீ வைத்துக் கொளுத்தினர். பட்மாலு என்ற இடத்தில் பொலிஸார் சுட்டதில் பயாஸ் அகமது என்பவர் இறந்தார்.

அதேபகுதியில் பொலிஸார் தங்கியி ருந்த கட்டடத்திற்குள் புகுந்து சூறையாடிய கும்பலைக் கலைக்க பொலிஸார் சுட்டதில் குறி தவறி குண்டு பாய்ந்ததில் பேன்சி என்ற 25 வயதுப் பெண் பலியானார்.

இதைத் தொடர்ந்து பதற்றம் அங்கு நிலவியதால் நிலைமையை சமாளிக்க கால வரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

மைசுமா என்ற இடத்தில் ஊரடங்கை மீறி பொலிஸார் மீது வெடிகுண்டுகளை வீசிய வன்முறைக் கும்பலைக் கலைக்க பொலிஸார் திருப்பிச் சுட்டதில் அப்ரார் கான் என்ற 18 வயது இளைஞர் இறந்தார். பட்டான், பாம்போர் ஆகிய இடங்களில் பொலிஸ் நிலையங்கள் மீது வன்முறையாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதில் உதவிப் பொலிஸ் அதிகாரி ஒரு வரின் மண்டை உடைந்தது. ஜகாங்கீர் சவுக், ஹைதல் போரா உட்பட பல இடங்களிலும் கலவரம் வெடித்தது. இந்த மோதல்களில் 70 பேர் காயமடைந்தனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த ஸ்ரீ நகர் முழுவதும் காலவரையற்ற ஊரடங்கு உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முக்கிய இடங் களில் பொலிஸார் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். மீண்டும் வெடித்துள்ள வன்முறையால் ஸ்ரீநகரில் பதற்றம் நிலவுகிறது. (6)

## மாளிகைப்புரத்தம்மன் கோவில் வாஸ்து சாஸ்திரப்படி விரிவாக்கம்

(சபரிமலை)

சபரிமலை மாளிகைப் புரத்தம்மன் கோயில், வாஸ்து சாஸ்திரப்படி விரிவாக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, கோவிலில் புதிய கொடிமரம் மற்றும் சுற்றுப் பிரகாரம் அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்ப சுவாமி சந்நிதானத்திற்கு அடுத்து, மாளி கைப்புரத்தம்மன் கோவிலுக்கும் இலட்சக் கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்வர். சந்நிதி தற்போது, 20 சதுர மீற்றர் பரப்பளவில் தான் உள்ளது. அதை இரட்டிப்பாக்க ஆலோ சிக்கப்பட்டு வருகிறது. கோவிலின் முன்பகுதி, பலிபீடம் அமைந்துள்ள பகுதியும் விரிவு படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுப் பிரகாரம் அகலப்படுத்தப்பட்டு, சிரமமின்றி சீவேலி நிகழ்ச்சிகள் நடத்த வசதி ஏற்படுத் தப்படும். ஐயப்ப சுவாமி தரிசனம் முடிந்து பக்தர்கள், நேரடியாக கோவிலுக்குள் வர வசதியாக, இரு படிகள் புதியதாக அமைக் கப்படும். இதற்காக திட்டம் தயாரிக்கப்பட் டுள்ளது. (6)

வேலியே பயிரை மேய்ந்தால் போல.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வேலியின் துணையோடு வன்னியில் நடக்கும் களவு

வன்னி மக்கள் படும் துன்பம் சொல்லுந்தரமன்று. யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகள், துயரங்களுக்கு அப்பால் அவர்கள் மீள் குடியேறுவதில் படும் அவஸ்தை போதுமென்றாகிற்று.

வீடுகளை இழந்தவர்களுக்கு அவற்றை அமைத்துக் கொடுப்பதற்கு அரசிடம் நிதி இல்லை. மக்கள், விவசாயம் செய்து அதில் வருகின்ற வருமானத்தைக் கொண்டு வீடுகளைக் கட்ட வேண்டுமென அரசு கூறுகிறது.

என்ன செய்ய முடியும்? நாங்கள் கட்டிய வீட்டை உடைப்பதற்கு பணம் இருக்கிறது. மீளக் கட்டுவதற்குத்தான் பணமில்லையா? என்று கேட்கும் திராணி தமிழ் மக்களிடம் இல்லை. அதேநேரம் வெடிகுண்டுகளின் அகோரத்தில் இருந்து தப்பிப்பிழைத்த வீடுகளில்; கதவு, நிலை, ஓடு, சீற் என்பவற்றை கழற்றும் வேலைகளில் திருடர் கூட்டம் ஈடுபடுகின்றது.

இதற்கு மேலாக வன்னியில் கைவிடப்பட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்களை கழற்றி எடுக்கும் பணியில் ஒரு கூட்டம் மிக வேகமாக செயற்படுகின்றது.

பொதுமக்கள் செல்வதற்கு தடை செய்யப்பட்ட இடங்களுக்குள் இக்கூட்டம் நுழைவதற்கு அனுமதி கிடைப்பதுதான் ஆச்சரியம்.

படையினரின் கையடக்கத் தொலைபேசிக்கு நூறு ரூபாய் பெறுமதி (Reload) திணித்து விட்டு திருடர் கூட்டம் கனகச்சிதமாக தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழைவதாக பொது மக்கள் வெதும்புகின்றனர்.

இது மட்டுமல்ல களவு ,கொள்ளை ,கசிப்பு என்ற நாசகாரமும் வன்னியில் தாண்டவமாடத் தொடங்கியுள்ளதாம்.

பொலிஸாரின் எண்ணிக்கை போதாமல் இருப்பதும், வீடுகளின் சொந்தக்காரர்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளில் இருந்து மீள முடியாமல் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்லாமல் இருப்பதும்,படையினரின் பொறுப்பற்ற தன்மையும், வன்னி மக்களின் சொத்துக்கள் களவு கொள்ளப்படுவதற்கு உதவுகின்றன.

எனவே இது விடயத்தில் உரியவர்கள் உரிய நடவடிக்கைகளை தயங்காமல் மேற்கொள்ள வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மக்கள் மீண்டும் மீண்டும் துன்பத்துக்கு ஆளாகும் பாவம் இந்த நாட்டை வேரோடு அழித்துவிடும்.

ஆக, வன்னிப்பகுதிபடையினரின்கட்டுப்பாட்டில் இருப்பதால் அந்தப் பகுதி மக்களின் சொத்துக்கள் காவு கொள்ளப்படாமல் உறுதி செய்யும் முழுப்பொறுப்பும் படையினருக்கே உரியது.

இதிலிருந்து அவர்கள் இம்மியும் விலகலாகாது.

# பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளுக்கு எப்போது கேட்டாலும் விசா வழங்க வேண்டும்

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் இந்தியாவில் சிகிச்சை பெற விரும்பி எப்போது மனு செய்தாலும் அவருக்கு சட்டப்படி விசா அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பார்வதி அம்மாள் விவகாரம் தொடர்பான வழக்கில் நேற்று முன்தினம் மத்திய அரசின் விளக்கத்தைக் கேட்ட சென்னை உயர்நீதிமன்றம்,வழக்கின் விசாரணையை நேற்றைக்கு ஒத்தி வைப்பதாக அறிவித்தது.

அதன் பிரகாரம் மீண்டும் இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் தர்மராவ் ,சசிதரன் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது மனுதாரர் தரப்பு வாதத்தில்,இந்தியாவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த யாசிர் அரபாத் ,தலாய் லாமா, நெல்சன் மண்டேலா உள்ளிட்ட சுதந்திர போராட்ட தலைவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் எந்தக் குற்றமும் செய்யாத விடுதலைக்காகப் பாடுபட்ட தனது மகனையும் ,கணவனையும் இழந்த பார்வதி அம்மாளை திருப்பி அனுப்பியது மனிதாபிமானமற்ற செயல். வேண்டுமென்றே விசா கொடுத்து வரவழைத்துவிட்டு விமான நிலையத்திலேயே திருப்பி அனுப்பியது அவரை அவமதிப்பதாக உள்ளது.

எனவே இதற்கு மத்திய அரசு நட்டஈடு வழங்க வேண்டும்.அவரது விமான செலவு உள்ளிட்ட பயணச் செலவுகளை மத்திய அரசு ஏற்கவேண்டும் என கூறப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் தீர்ப்பு அளித்தனர்.

அதில் பார்வதியம்மாள் தற்போது தனது பயணத்தை தள்ளி வைத்து இருப்பதாக இலங்கை நாடாளுமன்றஉறுப்பினர் சம்பந்தன் கூறியுள்ளார்.ஆனால்,எதிர்காலத்தில் பார்வதியம்மாள் இந்தியாவில் சிகிச்சை பெற விரும்பினால் எப்போது மனு செய்தாலும் அவருக்கு சட்டப்படி விசா அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

மத்திய அரசு வக்கீலும் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார்.

இதேவேளை பார்வதி அம்மாளின் உடல்நிலை கடந்த சில நாட்களாக மோசமாக உள்ளதாகவும்,உடல் நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ச-5)

# படுகொலைக்கு துணைபோன நாடுகளை கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்!

## நாம் தமிழர் கட்சி அழைப்பு

(சென்னை)

தமிழினப் படுகொலைக்குத் துணைபோகும் இந்தியா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு எதிராக ஜூலை 10 ஆம் நாள் நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் அழைப்பு விடுத்துள்ளார்.இது குறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

தமிழர்கள் உலக வல்லரசுகள் அனைத்தின் உதவியுடன் சிங்கள ஏகாதிபத்தியத்தால் பெரும் எண்ணிக்கையில் அழித்தொழிக்கப்பட்ட பின்பு உலகம் முழுவதும் எழுந்த கடும் எதிர்ப்பின் காரணமாக ஒரு வருடம் கழித்து ஐ.நா. அமைப்பானது அரசின் போர்க்குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கு மூவரடங்கிய நிபுணர் குழுவினை நியமனம் செய்துள்ளது.

ஐ.நாவின் பொதுச் செயலாளர் பான் கீ முன் அமைத்த நிபுணர் குழுவில் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவன் ரட்னரும், இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சுகி தருஸ்மனும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஸாஸ்மின் சூகாவும் இடம்பெற்றுள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றங்களை ஆராய பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவை உலகெங்கும் உள்ள மனித உரிமை ஆர்வலர்களும், இன விடுதலைக்காக போராடும் அமைப்புக்களும், வரவேற்றுள்ள போதிலும் பெயரளவில் கம்யூனிசம் பேசும் ரஷ்யா, சீனா உள்ளிட்ட 29 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்தியா இது குறித்து கருத்து ஏதும் தெரிவிக்காமல் மௌனம் சாதிக்கிறது.

இந்தியா,ரஷ்யா,சீனா உள்ளிட்ட சர்வதேச நாடுகளிடம் தாம் பெற்ற உதவிகளை கொண்டு எத்தகைய கோரத் தாண்டவத்தை இலங்கை ஆடியுள்ளது என்பதற்கு தினந்தோறும் பல்வேறு வகை சான்றகள் ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.

அதி நவீன ராடர்கள் , உளவு பார்க்கும் கருவிகள் ,ரோந்து கப்பல்கள் உட்பட எண்ணற்ற ஆயுதங்களை தமிழர்களை கொன்றொழிக்க இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளது. தமிழர்களுக்கு எதிரான போரில் தடைசெய்யப்பட்ட 500 மில்லியன் டாலருக்கு மேற்பட்ட மதிப்புள்ள கொத்துக் குண்டு மற்றும் இரசாயன ஆயுதங்களை ரஷ்யா இலங்கைக்கு விற்பனை செய்துள்ளது.

இத்தகைய நிலையில் கண்முன்னே நடக்கும் இந்த கொடுஞ்செயலை தடுத்து நிறுத்துவதும் அதற்கு எதிராக கடும் போராட்டங்களை முன்னெடுப்படும் நம் அனைவரின் கடமை.

ஆகவே முதற்கட்டமாக வரும் ஜூலை 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நாம் தமிழர் கட்சி நடத்துகிறது.

இதில் தமிழர்கள் அன்னவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு நம் எதிப்பினை உலகுக்கு உணர்த்துவோம் என்று தெரிவிக்கின்றேன். இவ்வாறு அறிக்கையில் சீமான் கூறியுள்ளார்.
(ச-5)

# நன்மையும் தீமையும் நம்கையில்-பாபா

இறைவன் மனிதனுக்கு உவந்தளித்த உயர்ந்த இருப்பிடம் தான் இவ்வுலகம். அதனை நாம் எவ்வாறு பாவித்து வருகிறோம் என்பதில் தான் அவ்வுயர்வு அமைகின்றது. வீடு ஒன்றை நல்ல சூழலில் அமைத்து அதனை எவ்வாறு சுத்தமாக அழகுற வைத்திருக்கின்றோமோ அவ் வீடு கவர்ச்சிகரமான, சுகாதாரமான இடமாக காணப்படும். வீட்டினை சுத்தமாகவும் வைத்துக் கொள்ளலாம். அசுத்தமாகவும் வைத்துக் கொள்ளலாம். சுத்தமாக வைத்துக் கொண்டால் நோய், நொடி அணுகாமலும் அசுத்தமாக வைத்துக் கொண்டால் அதுவே நமக்கு கெடுதி பயப்பனவாகவும் அமைந்துவிடும்.

இது போன்று இறைவன் நமக்கு அளித்த இவ்வுலகம் எங்களுடைய பாவ தாட்சணைகளை பொறுத்து நரகமா? சொர்கக்கமா என்பதை காட்சிப்படுத்துகிறது. வீட்டிற்கு எவ்வாறு வெள்ளை அடித்து பொலிவுற வைத்திருக்கின்றோமோ அதுவாக நம்முள்ளத்தையும் சூது, வாது, களவு, பொறாமை, கயமை இல்லாத வெளீரென வைத்துக் கொண்டால் இவ்வுலகம் நமக்கு சொர்க்கமே.

இவ்வுலகில் அடுத்த ஜீவனை வருத்தி, துன்புறுத்தி அடுத்தவரின் கண்ணீருக்குப் பாத்திரமானவர் எந்த வழியில் தப்பி வாழ்ந்தவர் எவருமே இல்லை. நீ அடுத்தவரின் குடும்பத்தை பிரித்து வைத்தாயானால், உனது குடும்பம் தானே பிரியும்.



மற்றவர் மனைக்கு தீ வைத்தவர் வீடு காரணம் புரியாது தானே பற்றி எரியும். எத்தனையோ காலங்க ளாய் கஸ்டப்பட்டு உழைத்து ஒரு வரின் பொருள், பண்டங்களை ஒரே நிமிடத்தில் அடித்து துன்புறுத்தி கொள்ளையிட்டவர் வாழ்வில் உறவு முறையில் உள்ளவரே கொள்ளை யும் இட்டு குடும்பத்தை குட்டிச் சுவ ராக்கி விடுவர். அடுத்தவரைக் கொலை செய்து சட்டத்தினால் கிடைக்கும் தண் டனையிலிருந்து தப்புவதற்காக இறைவனை நாடி தூக்குக் காவடி எடுப்பதிலும் பார்க்க உயிர் பிரியும் காலை தான் தப்பி வாழ உன்னைக் கெஞ்சி மண்டாடிய வேளை, கொல்லாது விட் டிருந்தால் புண்ணியமும் சேர்ந்திருக்கும் சந்ததியும் தழைத் தோங்கும்.

எல்லாம் வல்ல பரந்த தெய்வம் ஸ்ரீ சத்ய சாயி பாபா அருளும் அருள் வடிவம்; இந்த உலகம் நமக்கு நன்மையாகவும் , தீமையாகவும் அமையப் பெறுவது நம் கையிலேயுள்ள தென்பதாகும்.

**ஜெய்சாயிராம் யாதவன்**

# ஷார்ஜாவில் 15 மாடி கட்டடத்தில் தீ விபத்து; 12 மாடிகள் எரிந்து நாசம்



(ஷார்ஜா)

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளில் ஒன்றான ஷார்ஜாவில் ரோலய் என்ற இடத்தின் அருகே புதினா பகுதி உள்ளது. இங்குள்ள 15 அடுக்குமாடி கட்டடத்தில் நேற்று முன்தினம் காலை 6 மணி அளவில் திடீரென தீப்பிடித்தது. இந்தத் தீ மளமளவென பரவியது.

காலை நேரம் என்பதால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மக்கள் புகை மூட்டத்தால் கண் விழித்தனர். தீப்பிடித்ததை அறிந்ததும் பதற்றம் மற்றும் பரபரப்புடன் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

இதற்கிடையே தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இருந்தும் தீ வேகமாக பரவியது. இதில் 12 மாடிகள் எரிந்து நாசமானது.

அங்கிருந்த அனைத்து பொருட்களும் தீயில் கருகின. இந்த விபத்தில் பல இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து சேதமாயின. உயிர்ச்சேதம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

இந்த அடுக்கு மாடி கட்டிடத்தில் 80 சத வீதம் பேர் இந்தியாவின் மாநிலத்தை சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது.

தீ விபத்தில் பலர் மாடிகளில் சிக்கிக் கொண்டனர். அவர்களை தீயணைப்புப் படையினர் ஏணிகள் மூலம் காப்பாற்றினர். தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (6)

## குர்திஷ் தீவிரவாதிகளுடன் துருக்கி இராணுவம் மோதல்

(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது குர்திஷ் கொரில்லா படை தாக்குதல் நடத்தியது.

இதைத் தொடர்ந்து துருக்கி இராணு வம் இதற்கு பதிலடி கொடுத்தது.

இந்த சண்டையில் 10 தீவிரவாதிகளும், 3 இராணுவ வீரர்களும் பலியானார்கள். 3 வீரர்கள் காயம் அடைந்தனர்.

குர்திஷ் தாக்குதலில் இந்த ஆண்டு இது வரை 80 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர்.

குர்திஷ் இன மக்களுக்காக தனி நாடு கோரும் ஆயுதப் போராட்டம் 1984 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. அன்றிலிருந்து இன்றைவரை 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். (6)

## நேபாள நாடாளுமன்றத்துக்கு வெளியே குண்டுவெடிப்பு

(காத்மண்ட்)

நேபாள நாடாளுமன்றத்துக்கு வெளியே நேற்று முன்தினம் குண்டு வெடித்தது. இதை அடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த குண்டு வெடிப்பு நேற்று முன்தினம் காலை 11 மணி அளவில் நடந்ததாகவும் இதில் எவரும் காயம் அடையவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குண்டு வெடிப்பின் பின்னணியில் இயங்கும் இளைஞர் படை என்ற அமைப்பு உள்ளதாக பொலிஸார் கூறினர். எனினும் யாரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் காத்மண்டு நகரின் மையப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கண்டெடுத்து செயல் இழக்கச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## ஈரான் விமானங்களுக்கு எரிபொருள் வழங்க மறுப்பு?

(டெக்ரான்)

ஈரான் அணு ஆராய்ச்சியில் ஈடுபடுவதை கைவிட மறுத்ததை தொடர்ந்து அந்த நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதார தடையை கடந்த வாரம் வித்தது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்து , ஜெர்மனி , ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் ஈரான் நாட்டு விமானங்களுக்கு எரிபொருள் வழங்க மறுத்து விட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இந்த செய்திகளை ஈரான் அரசு மறுத்து உள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டு அமைச்சரக செய்தி தொடர்பாளர் ராமின் மெக்மான்பாராஸ்ட் நிருபர்களிடம் கூறுகையில் ,

இதுபோன்ற கட்டுப்பாடு எதுவும் ஈரான் மீது விதிக்கப்படவில்லையெனவும் ஈரான் விமானங்களுக்கு எரிபொருள் வழங்க மறுத்து விட்டதாக கூறப்படுவது பொய்யான தகவல் ஆகும். இது ஈரானுக்கு எதிராக நடத்தப்படும் பிரசார யுத்தத்தின் ஒரு பகுதி ஆகும் என்று தெரிவித்தார்.

ஜெர்மனி போக்குவரத்து அமைச்சரக அதிகாரியும் இப்படி எந்தவித தடையும் ஈரானிய விமானங்கள் மீது விதிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். (6)




## அவுஸ்திரேலியாவிலுள்ள இந்திய விடுதியில் வெடிவிபத்து

(சிட்னி)

அவுஸ்திரேலியாவிலுள்ள இந்திய விடுதியில் கடந்த திங்கட்கிழமை வெடிவிபத்து ஏற்பட்டது.

சிட்னி நகரிலுள்ள இந்தியருக்குச் சொந்தமான விடுதியில் இருந்து இரவு திடீரென வெடிசத்தம் கேட்டது. இதைத் தொடர்ந்து விடுதி தீப்பற்றி எரிந்தது. உடனடியாக விடுதியில் இருந்த 4 ஊழியர்களும் வெளியே குதித்துத் தப்பினர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு தீயணைப்பு வண்டிகள் வந்து தீயை அணைத்தன. மேலும் அருகில் இருந்த கட்டடங்களுக்கும் தீ பரவாமல் அவர்கள் தடுத்தனர். இந்த சம்பவத்ததால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

விடுதியில் வெடிவிபத்து ஏற்பட்டதா அல்லது யாராவது வெடிகுண்டு வீசி தாக்கினார்களா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விடுதியில் நடந்த வெடிவிபத்து காரணமாக முன்பகுதி தூள்தூளாக சிதறிக் காணப்படுகிறது. விடுதிக்கு முன்பிருந்த வீதியில் கண்ணாடிகள் உணவுப் பண்டங்கள் சிதறிக் கிடந்தன.

சம்பவம் நடந்தபோது விடுதிக்கு அருகிலிருந்த 2 நபர்கள் தப்பியோடியதை சிலர் பார்த்துள்ளதாகவும் அதன் அடிப்படையில் அந்த மர்ம நபர்களை சிட்னி பொலிஸார் தேடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

## உகண்டாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளோரை நாடுகடத்தவும்

### அந்நாட்டு எம்.பிக்கள் கோரிக்கை

(உகண்டா)

உகண்டாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களை வெளியேற்றுமாறு அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில் இருந்து உகண்டாவுக்கு அகதிகளாக சென்ற 300 க்கும் அதிகமானவர்கள் அங்கு தங்கியுள்ளனர். மேற்கத்திய நாடுகளுக்கு அகதிகளாக புலம்பெயரும் நோக்கில் சட்டவிரோதமாக பயணம் மேற்கொள்வோரே நீண்ட காலமாக அங்கு தங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுள் பலர் கைது செய்யப்பட்டிருந்த போதும் பலர் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் இது தொடர்பில் விசாரணை நடத்தி அவர்களை உடனடியாக நாடுகடத்துமாறு உகண்டா நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (6)

## பாகிஸ்தானில் அணுஉலைகள் அமைப்பதில் சர்வதேச விதிமுறைகளை மீறமாட்டோம்

### இந்தியாவிடம் சீனா உறுதி

(பீஜிங்)

பாகிஸ்தானில் அணு உலைகள் அமைக்கும் விவகாரத்தில் எந்த விதத்திலும் சர்வதேச விதிமுறையையும் , பொறுப்பையும் மீறி நடந்து கொள்ள மாட்டோம் என்று இந்தியாவிடம் சீனா உறுதி அளித்துள்ளது.

நான்கு நாட்கள் அரசுமுறைப் பயணமாக சீனாவுக்கு சென்றுள்ள சிவ்சங்கர் மேனன் , அந்நாட்டு பிரதமர் வென் ஜியாபாவோ , வெளியுறவு அமைச்சர் யாங்ஜிசி உட்பட முக்கிய தலைவர்களை சந்தித்துப் பல்வேறு விடயங்களைப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது , பாகிஸ்தானில் இரு அணு உலைகளை சீனா நிறுவவுள்ளது தொடர்பாகவும் விவாதித்தனர்.

அப்போது பாகிஸ்தானில் அணு உலைகளை அமைக்கும் விடயத்தில் சர்வதேச விதிமுறைகளை சீனா மதித்து நடக்கும் என்று உறுதி அளித்ததாக சிவ்சங்கர் மேனன் கூறினார். (6-4)



வட ஐரோப்பியாவில் அமைந்திருக்கும் லிதுவேனியா நாட்டின் தலைநகரான வில்னியஸிலிருந்து சுமார் 150 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது ரமிகலா என்கிற சிறிய நகரம்.

இந்நகர மக்களின் கலாசார சின்னமாக ஆடு உள்ளது. அந்தச் சிறிய நகரம் தோற்றம் பெற்று 640 வருடங்கள் ஆகின்றன. இதை நினைவு கூர்ந்து ஆடுகளுக்கு அழகுப் போட்டி ஒன்று நேற்று முன்தினம் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது நெதர்லாந்து; போராடித் தோல்வியடைந்தது உருகுவே அணி

(கேப்டவுன்)

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் அரையிறுதி ஆட்டத்தில் உருகுவே அணியை 3-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து நெதர்லாந்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் கேப்டவுனில் நடந்த அரையிறுதியில் உருகுவே, நெதர்லாந்து அணியை சந்தித்தது. உருகுவே நட்சத்திர வீரர் சாரஸ் காலிறுதியில் சிவப்பு அட்டை பெற்றதால் இந்த போட்டியில் விளையாடவில்லை.

நெதர்லாந்து அணியில் எந்தமாற்றமும் இல்லை. போட்டி ஆரம்பமாகினாலும் எந்த பரபரப்பும் இல்லாமல் பந்து அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தது.

ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து அணித்தலைவர் ஜியோவானி வான் புரோன்காஸ்ட் சிறப்பாக ஒரு கோல் அடித்து அந்த அணிக்கு முன்னிலை தேடிக்கொடுத்தார்.

மைதானத்தின் இடது பக்கத்தில் இருந்து இடது காலால் அடிக்கப்பட்ட பந்து 30 அடி தொலைவை புல்லட் வேகத்தில் கடந்து கோல் கம்பத்துக்குள் புகுந்தது.

இந்த உலகக்கிண்ண தொடரில் புரோன்காஸ்ட் அடித்த முதல்கோல் இது தான். ஆனால் முத்தான கோல் மற்ற அனைத்து கோல்களையும் விட அதி அற்புதமான முறையில் இந்த கோல் அடிக்கப்பட்டது அப்படி ஒரு உதை.

இதனால் ஆட்டத்தில் பரபரப்பு கூடியது. பதிலுக்கு கோல் அடிக்க உருகுவே போராடியது. ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து அணித்தலைவர் அடித்த கோலுக்கு பதிலடி கொடுத்தார் உருகுவே அணித்தலைவர் போர்லான்.

சுமார் 25 அடி தொலைவில் இருந்து இவரால் உதைக்கப்பட்ட ஜபுலானி நெதர்லாந்து கோல்காப்பாளர் கைக்குள் சிக்காமல் அழகாக வளைந்து சென்று வளைக்குள் தஞ்சமடைந்தது. இந்த உலகக் கோப்பையில் போர்லன் அடித்த 4ஆவது கோல் இதுவாகும்.

இந்த கோலையடுத்து முதல்பாதி ஆட்டம் 1:1 என்று சமனிலையில் முடிந்தது. முதல் பாதியில் அடிக்கப்பட்ட இரு கோல்களுமே லோங் ரேஞ்ச் கோல்கள் எதிர்பார்க்க முடியாதவை கணிக்க முடியாதவை பிடிக்க முடியாதவை.

பிற்பாதியில் பந்தை தன் கட்டுக்குள் வைத்து ஆரஅமர யோசித்து யோசித்து விளையாடியது நெதர்லாந்து. உருகுவே அபாயகரமான எதிரியாக மாறியதே இந்த மாற்றத்துக்கு காரணம்.

68ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் வான்டெர்வார்ட் அடித்த பந்தை உருகுவே கோல் காப்பாளர் முஸ்லெரோ தடுத்தார். அந்த பந்து மற்றொரு நெதர்லாந்து வீரர் ஆர்ஜான் ராபனிடம சென்றது. அதனை வந்த வேகத்தில் வெளியே அடித்து வீணடித்தார் ராபன்.

தொடர்ந்து 70ஆவது நிமிடத்தில் ஸ்னைடர் நெதர்லாந்துக்கான 2ஆவது கோலை அடித்தார். அடுத்த 3ஆவது நிமிடத்தில் ஆர்ஜான் ராபன் 3ஆவது கோலை அடித்தார். டர்த் குயித் கொடுத்த பாசை தலையால் முட்டி ராபன் கோலாக மாற்றினார். இதனால் நெதர்லாந்து 3:1 என்று முன்னிலை பெற்றது.

தொடர்ந்து அடிக்கப்பட்ட இரு கோல்களால் உருகுவே வீரர்கள் நிலைகுலைந்து போனார்கள். ஆனாலும் போராட்டத்தை கைவிடவில்லை.

இறுதியில் ஸ்டாப்பேஜ் நேரத்தில் 92 ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் பெரைரா ஒரு கோல் அடித்தார் ஆனால் மேற்கொண்டு கோல் அடிக்க நேரமில்லை. ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ஆட்ட நேர இறுதியில் 3:2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து வெற்றிபெற்று இறுதி போட்டிகுள் நுழைந்தது.








உலகக் கிண்ண கால்பந்தாட்டம்-2010
சம்பியனாகும் நாடு?..........................


சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 09.07.2010 இற்கு முன்னர் அனுப்புவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் 10 வெற்றியாளர்களுக்கு டயலொக் நிறுவனத்தின் அழகிய Boot Bag பரிசாக வழங்கப்படும்.

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தொலைபேசி : ..............................
தே.அ.அ. இல. : ..............................

விளம்பரப் பகுதி,
வலம்புரி,
இல.3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி
Dialog

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மங்கலவிளக்கேற்றுவதையும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் உரை நிகழ்த்துவதையும் மேல் உள்ள படங்களிலும் வெற்றிபெற்ற வீராங்கனைக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கேடயம் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வு மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் :- என்.குமார், ரம்சன்)*

## பாடசாலை மட்ட...

மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தலைமையில் இறுதிநாள் போட்டிகள் மற்றும் நிகழ்வுகள் நடைபெற்றன.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட விருந்தினர்கள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பாண்ட் வாத்தியக் குழுக்களின் பாண்ட் வாத்திய இசையுடன் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

பிரதமவிருந்தினர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். 11, 13, 15 இருபாலாருக்குமான 100 மீற்றர் ஓட்டப் போட்டிகள் முதல் போட்டிகளாக நடை பெற்றன. 13 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல், 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போன்ற போட்டிகள் நடைபெற்றன.

இடைவேளையின் போது அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் இசையுடன் கூடிய உடற்பயிற்சி கண்காட்சியும் யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பாட்டுக்கான நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

17, 19 இருபாலாருக்குமான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியுடன் போட்டிகள் நிறைவுக்கு வந்தது. தொடர்ந்து பரிசளிப்பு விழா நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட ரீதியான தரப்படுத்தலில் யாழ்ப்பாண மாவட்டம் பெரு விளையாட்டுப் போட்டிகளில் 925 புள்ளிகளும் தடகளப் போட்டிகளில் 784 புள்ளிகளுமாக 1709 புள்ளிகள் பெற்று முதலிடத்தைத் தட்டிச்சென்றது.

இரண்டாம் இடத்தை 386 புள்ளிகள (பெருவிளையாட்டு-60, தடகளம்-326) பெற்று மன்னார் மாவட்டமும், மூன்றாம் இடத்தை 314 புள்ளிகள் (பெருவிளையாட்டு -95, தடகளம்-219) பெற்று வவுனியா மாவட்டமும் தட்டிச்சென்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முறையே 25, 12 புள்ளிகளைப் பெற்று அடுத்த இடங்களில் இருந்தன.

ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் சிறந்த ஆற்றுகையை வெளிப்படுத்திய வீர, வீராங்கனைகளுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன. வீர வீராங்கனைகளின் பெயர்விபரம் வருமாறு,

**11 வயதுப்பிரிவு:** ஆண்கள் பிரிவில் மன்னார் முருங்கன் மகாவித்தியாலய வீரன் எஸ்.ரி.சத்தியன் (புள்ளி-13), பெண்களில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியைச் சேர்ந்த அ.அபிநயா (புள்ளி 10).

**13 வயதுப்பிரிவு:** ஆண்கள் பிரிவில் மன்னார் சென்சேவியர் கல்லூரியைச் சேர்ந்த ம.அபியத்சீம் (புள்ளி-15), பெண்களில் இளவாலை கன்னியர் மட வீராங்கனை சி.மேரி நிலக்ஷனா (புள்ளி 13).

**15 வயதுப்பிரிவு:** ஆண்கள் பிரிவில் மன்னார் சென்சேவியர் கல்லூரியைச் சேர்ந்த ஜி.ஆர்.சந்தியோகன் (புள்ளி-10), பெண்களில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ம.ஜோய்கருணா, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.சங்கீதா (புள்ளி 13).

**17 வயதுப்பிரிவு:** ஆண்கள் பிரிவில் சென்பற்றிக்ஸ் கல்லூரியை சேர்ந்த சி.ஆர்.மோடேன் எல்விஸ் (புள்ளி-15), பெண்களில் வட்டு மத்தியக்கல்லூரியைச் சேர்ந்த ம.கமலினி, மன்னார் நானாட்டான் மத்திய மகாவித்தியாலய வீராங்கனை கி.யூடிற்ஜெமினி (புள்ளி 13).

**19 வயதுப்பிரிவு:** ஆண்கள் பிரிவில் சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பு.பானுப்பிரியன், வவுனியா தமிழ் மகாவித்தியாலய லி.சர்மிளன் (புள்ளி-10), பெண்களில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.காவேரி (புள்ளி 15).

**21 வயதுப்பிரிவு:** ஆண்கள் பிரிவில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.ரகுவரன், மன்னார் நானாட்டன் மத்திய மகாவித்தியாலய ஜே.செல்வராஜ் (புள்ளி -10), பெண்களில் மகாஜனக்கல்லூரியைச் சேர்ந்த செ.கீர்த்திகா, வவுனியா கோவிற்குளம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.எழிலரசி (புள்ளி 15) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற வீரர்கள் மற்றும் மாவட்டங்களின் வெற்றிக்கேடயங்களை பிரதமவிருந்தினர் வழங்கினார். இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராசையா ஆகியோரும் கலந்து கொண்டனர். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவகம், வடமராட்சி, கிளிநொச்சி, முல்லைதீவு, துணுக்காய், மடு, மன்னார், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

தடகளப்போட்டிகள் ஆரம்பித்த நாட்களில் இருந்து முடியும் நாள்வரையிலும் மொத்தமாக 9 வீரர்கள் ஆரம்பிப்பாளர்களால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வாகன உதிரிப்பாகங்கள்...

ஆஜர் செய்யப்பட்டதையடுத்து அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ள கிளிநொச்சி மாவட்ட நீதவான் பி.சிவகுமார், இந்தக் கொள்ளை தொடர்பான விரிவான விசாரணைகள் நடத்தி நீதிமன்றத்திற்குத் தாமதமின்றி அறிக்கை சமர்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மயில்வாகன புரம் பகுதியில் கைவிட்டு வந்த தமது பஸ் ஒன்றை அங்கு சென்று பார்வையிட்ட அதன் உரிமையாளர் அது நல்ல நிலையில் இருந்ததையும் என்ஜினுக்குரிய பற்றறி மற்றும் பெற்றோல் ஆகியன இருந்தால் அந்த வாகனத்தை ஓட்டிச் செல்லக் கூடியதாக இருந்ததையும் கண்டறிந்து அதற்குத் தேவையான பெற்றோல் மற்றும் பற்றறியுடன் சென்ற போது தனது பஸ் வண்டியின் பாகங்கள் அனைத்தும் கழற்றப்பட்டு இருந்ததைக் கண்டு உடனடியாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் எடுத்த துரித நடவடிக்கையின் பயனாக நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்தும் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை செய்து வருகின்றனர்.

வாகனங்களின் உதிரிப்பாகக் கொள்ளைகள் மற்றும் பொதுமக்களின் உடைமை கொள்ளைகள் தொடர்பில் பல உபயோகமுள்ள தகவல்கள் இந்த விசாரணைகளின் மூலம் வெளிவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# இலங்கையர்களுடன் கூடிய மற்றொரு படகு கைது

(கொழும்பு)

இலங்கையர்களும் உள்ளடங்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் அகதிகளின் படகு ஒன்று அவுஸ்திரேலியாவின் வடமேற்கு கரையோரப் பகுதியில் அஸ்மோர் தீவுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் இலங்கை அகதிகள் தொடர்பிலான அவுஸ்திரேலியாவின் அகதிக்கொள்கையின் தடை நீக்கத்தை அறிவித்த சில மணித்தியாலங்களில் இந்த படகு மீட்கப்பட்டுள்ளது.

தற்போது அவர்கள் பாதுகாப்பு சுகாதார மற்றும் அடையாள பரிசோதனைகளின் பின்னர் கிறிஸ்மஸ்தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் அவர்கள் அங்கு வந்தமைக்கான காரணங்கள் தொடர்பிலான வாக்கு மூலங்களும் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனினும் இப்படகில் பயணித்தவர்களின் தொகையை குறிப்பிடவில்லை.

இந்த வருடத்தில் மீட்கப்பட்ட 76ஆவது அகதிப்படகு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# அனைத்து நாடுகளிலும் இயங்கி வரும்...

ஐ.நாவில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு. ஒரு அங்கத்துவ நாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் முதலில் அதன் பாதுகாப்புச் சபை, மனித உரிமைகள் சபை ஆகியவற்றுக்கு அந்த யோசனையைச் சமர்ப்பித்து அவற்றின் அங்கீகாரத்தை முதலில் பெற வேண்டும் என்பது ஐ.நா. நியதி. ஆனால் மூன் அப்படிச் செய்யவில்லை.

அவருக்கென ஆலோசனைக்குழு என்று எதேச்சாதிகாரமாக மூன் நியமிக்கின்றமைக்கு ஐ.நா. சட்டத்தில் இடமில்லை. ஜனாதிபதி, இராணுவ உயரதிகாரிகள், பயங்கரவாதத்தைத் தோற்கடித்த அரச படையினர் ஆகியோரை யுத்தக் குற்ற நீதிமன்றம் ஒன்றின் முன் நிறுத்தி தண்டிக்கின்றமைக்காகவே இந் நிபுணர் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையை யுத்தக் குற்றம் என்கின்ற பெயரில் தண்டிக்க ஐ.நாவால் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட நடவடிக்கையின் முதல் கட்டமே இது.

எமது நாட்டின் தேசப்பற்றாளர்கள் எவரும் இச் சதி நடவடிக்கையை அனுமதிக்கவே மாட்டார்கள். இலங்கை பயங்கரவாதத்தை முறியடித்து விடாது என்றே பான் கீ மூன் நம்பிக் கொண்டிருந்தார்.

ஆனால் நாம் பயங்கரவாதத்தை முறியடித்துக் காட்டி விட்டோம். அதேபோல இந் நிபுணர் குழுவை பான் கீ மூன் கலைக்கும் வரை ஐ.நாவுக்கான எதிரான எமது போராட்டத்தை நிறுத்தவே மாட்டோம்.

நான் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் என்ற வகையில் இவற்றைக் கூறுகின்றேன். ஒரு அமைச்சராக அல்ல.

**கேள்வி:-** உங்கள் நடவடிக்கைகளால் அரசுக்கு பிரச்சினைகள் ஏற்படாதா? உங்கள் முற்றுகை நடவடிக்கையைப் பயங்கரவாதச் செயற்பாட்டின் வடிவமாக வன்முறையின் உருவமாக ஏன் கருதக் கூடாது?

**பதில்:-** நான் அமைச்சராகவோ அரசில் அங்கம் வகிக்கும் ஒருவராகவோ இல்லா விட்டால் கூட இந்த முற்றுகை நடவடிக்கையைச் செய்துதான் இருப்பேன்.

ஏனெனில் நான் இந்த நாட்டின் குடிமகன். எனது நாட்டை நேசிக்கின்றேன். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திய தலைவர்களையும் படையினரையும் காப்பாற்ற வேண்டிய தார்மீகக் கடமையும் பொறுப்பும் நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு.

இவர்கள் யுத்தக் குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படுகின்றமையை அனுமதிக்கவே முடியாது. இந் நாட்டுப் பிரஜைகள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

எமது போராட்டத்தில் மிகவும் கௌரவத்துக்குரிய புத்தபிக்குகளும் பங்கேற்கின்றார்கள். ஆகவே இது பயங்கரவாத நடவடிக்கை அல்ல.

அமெரிக்காவால் ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மீது தொடுக்கப்பட்டதைப் பயங்கரவாதத்துக்கு உதாரணங்கள் ஆகின்றன.

**கேள்வி:-** இனிமேல் என்ன செய்வீர்கள்?

**பதில்:-** பான் கீ மூன் நிபுணர் குழுவை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்கின்றோம். அவர் நிபுணர் குழுவை வாபஸ் பெறும்வரை ஐ.நாவின் கொழும்பு அலுவலகத்தின் முன் எமது ஆர்ப்பாட்டமும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டமும் தொடரும். அவர் நிபுணர் குழுவைக் கலைக்கத் தவறினால் எமது போராட்டம் உக்கிரமடையும்.

**கேள்வி:-** அப்போதும் அவர் நிபுணர் குழுவைக் கலைக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?

**பதில்:-** நாம் மிகவும் கடுமையான விழி முறைகளைக் கைக்கொள்ள வேண்டியிருக்கும். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஐ.நா. அலுவலகங்கள் முன்பாகவும் போராட்டம் நடத்துவோம்.

உலகளாவிய இப் போராட்டத்தில் வெளிநாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்களும் பங்குபற்ற வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்.

இதேவேளை தேசிய சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்த அமைதியான எதிர்ப்புப் போராட்டத்தைப் பொலிஸாரின் பலத்தைக் கொண்டு கலைத்த பொலிஸ் அதிகாரி இலஞ்சம் பெறுபவர். அவர் போராட்டக்காரர்களைக் கலைக்க ஐக்கிய நாடுகள் சபையிடம் இலஞ்சம் பெற்றுள்ளார் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் பணியாளர்களை வெளியில் செல்ல விடாது அமைதியான முறையிலான போராட்டத்தை மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டங்களின் போது சிறிய இடையூறுகள் ஏற்படுவது இயல்பானது. நிபுணர் குழுவை விலக்கிக் கொள்வது குறித்து ஐ.நா. செயலாளர் உடனடியாக அறிவிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார். தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஐ.நா. சபை...

போது பாதுகாப்பு மதிப்பீடுகளை மேற்கொள்வதாகவும் கொழும்பு ஐ.நா. அலுவலக உத்தியோகத்தர்கள் விரைவில் மீண்டும் பணிக்குத் திரும்புவர் எனஎதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## தேசிய...

நாம் எமது எல்லைக்குள் நின்று கொண்டு அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

இலங்கை பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைய வேண்டியுள்ளது. எனவே ஏனைய நாடுகளுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது கவனமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## தமிழரின் அரசியல் தீர்வு விடய...

மீள்குடியேற்ற பிரதேசங்களில் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை இலங்கை அரசாங்கம் இராணுவ தேவைக்காக எடுக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா உதவி புரிய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பில் அங்கு சென்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழு நேற்று இந்திய நிதி அமைச்சரையும் வெளியுறவுத்துறை அமைச்சரையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்திய போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின் போது மீள்குடியமர்ந்துள்ள இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இந்தியா அதிகமான உதவிகளை செய்யவேண்டும் என்றும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரிடம் புதுடில்லிக்குச் சென்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழுவில் இடம் பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்தத் தகவல்களை தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறு அன்று புதுடில்லியை சென்றடைந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வெளியுறவுச் செயலர் நிருபமராவை திங்களன்று சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

அதன் பின்னர் நேற்று அவர்கள் இந்திய நிதியமைச்சரையும் உள்துறை அமைச்சரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். இன்று அவர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் வெளியுறவுத்துறை அமைச் சரையும் சந்திக்கவுள்ளார்கள். (ச-5,9)


CIMA UK




Call 772395895

CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம் (Listed College), பரீட்சை நிலையம்

MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும்.
எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்

Job Gurantee Skill Migration, Australia,Canda,UK

* ICDL - International Computer Driving License
* DIE - Diploma in English (Duration 06 Months)
Free

MCS
Supported By UNDP/JRRP

324, பல்கலைக்கழக சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

(C-614)



தங்க நகைப் பிரியர்களே தங்கமான செய்தி

தங்க நகை ஆபரணங்கள் எதுவானாலும் தர நிர்ணய சான்றிதழுடன் பெற்றுக் கொள்ளலாம்.



சிறிராம் ஜுவலர்ஸ்
193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 8334 (1823)





Barnabas இன் மலிவு விற்பனை




247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

5 வருட உத்தரவாதம்
Life Time Free Service

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

360/1, கத்தோலிக்க அச்சக கட்டிடத் தொகுதி, யாழ்ப்பாணம்.

சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.

- 29" Sony Flat TV, 21" Flat TV, 14" TV மிக மிக குறைந்த விலையில்
- தற்போது 21" TV 12,490 ரூபாய் மட்டும்...
- உதை பந்தாட்ட உலகக் கிண்ண விளையாட்டைக் கண்டு களிக்க 29" TV மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யுங்கள்.
- தற்போது எம்மிடம் எலக்றிக் சமையல் பொருட்கள் மிகக் குறைந்த விலையில்
- எங்கும் பெற முடியாத உத்தரவாதமும், விற்பனைக்குப் பிந்திய அதிவேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே! உடனே அழையுங்கள் 077 7448668.
- மிக மிக இலகுவான கொள்வனவு முறைமைகள் தற்போது நடைமுறையில்.
- எந்த மொத்த வியாபாரிக்கும் வியக்க வைக்கும் விசேட சலுகைகள்...
- சாவகச்சேரி, கிளிநொச்சி போன்ற இடங்களில் மொத்த வியாபாரிகள் தேவை.

(C-61)



31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர் செல்வரட்ணம் சண்முகநாதன் (சண்)



அன்பு முகமும், தயவான பேச்சுக்களும், மங்காத தெளிவுடன் மனங்குளிர எடுத்துரைக்கும் அறிவுரைகளும், எமை அன்புடன் அரவணைக்கும் அமைதியான சிந்தனையும், பொங்கு நினைவுகளுடன் பூமியிலே நீர் வாழ்ந்தீர்- காலனவன்
கண்ணுற்று உந்தனையும் கவர்ந்து சென்றான்...
இன்று உங்கள் பிரிவால் உளம் கலங்குகின்றோம்.

என்றும் ஈரவிழிகளுடன்,

சகோதரி: -லோகேஸ் (லோலி),
மைத்துனன்:- தா.ஈசன் (யாழ்.தபால் திணைக்களம்),
மருமக்கள்:- டினோ, றோயன், நீகன்.

உருவாக மண்ணில் 27.06.1946
அருவாக விண்ணில் 08.06.2010

(1817)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.